பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 15 வெள்ளிக்கிழமை 30.06.2023 கதிர் 231

# கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழியா?

## குடிதண்ணீர் குழாய் பொருத்தக் கிண்டிய குழியில் வெளித் தெரியும் மனித எச்சங்கள்



**முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாயில் குழிதோண்டுபோது வெளிப்பட்ட மனித எச்சங்கள் குறித்து நீதிமன்றின் அவசர கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.**

**கொக்குத்தொடுவாய் கிராமத்தின் மத்திய பகுதியில் நீர்வழுங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையினால் குடிதண்ணீர் வழுங்கலுக்கான குழாய்கள் பொருத்தும்** ☞2

## இது ரகசியம் அல்ல!

வவுனியா மாவட்டம் நைனாமடுவில் சீனித் தொழிற்சாலை அமைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ள முன்முயற்சியில் ஜனநாயகக் கூட்டணியின் பங்காளியான ரெலோவும் ஒரு முக்கிய தரப்பு என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. இந்த விவகாரம் இந்தியாவின் அதிருப்தியைச் சந்தித்துள்ளது என்பதையும் இந்தப் பத்தியில் பலதடவைகள் வெளிப்படுத்தியிருக்கின்றேன். இதனால் பலரும் ரெலோவை நோக்கிக் கேள்வி எழுப்பி வருகின்றார்கள்.

கடந்த இரண்டு தசாப்தங்களாகத் தமிழ்த் தேசியம் பேசிவரும், அதற்காகவே தாங்கள் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துவரும் ரெலோ, அரசியல் ரீதியாக (சிங்களக் குடியேற்றங்கள்) வடக்கைப் பேராபத்திற்குள் தள்ளக்கூடியம் சுற்றுச்சூழல் பேராபத்திற்குள் வடக்கை தள்ளிவிடக்கூடியதுமான இந்தத் திட்டத்தை உருவாக்கி, அதைச் செயற்படுத்துவதில் குத்தி முறிவதற்கான காரணம் என்ற என்பதே அந்தக் கேள்வி.

அந்தக் கேள்வியை நேரடியாக எதிர்கொள்ள முடியாத ரெலோ, இந்த விடயத்தை அம்பலப்படுத்திய எமது பத்திரிகையை மஞ்சள் பத்திரிகை ☞2

## ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமனம்

தேர்தல்கள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பெயரிடப்பட்டுள்ளனர்.

அதன்படி இலங்னை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்றநீதியரசர் எல்.டீ.பி.தெஹிதெனியவும், ஏனைய உறுப்பினர்களாக நிமலசேன கார்தியா புந்திஹேவா, தையமுத்து தனராஜ், பேராசிரியர் பர்சானா பாத்திமா மற்றும் கலாநிதி தினுக் ☞2

## யாழ்ப்பாணம் வந்தார் மைத்திரி பல தரப்பினருடனும் சந்திப்பு



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது மூன்று நாள் பயணமாக நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். சமயத் தலங்களுக்குச் சென்று வழிபட்ட அவர், சமயத் தலைவர்களையும் சந்தித்துப் பேசினார். நிகழ்வுகளிலும் பங்கேற்றார்.

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்ற ☞2

## 19.8 பில்லின் டொலர் மட்டுமே உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு

### ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் தெரிவிப்பு

42.1 பில்லியன் டொலர் அளவிலான உள்நாட்டு கடன்களில் 19.8 பில்லியன் டொலர் மாத்திரமே மறுசீரமைப்புக்கு உள்ளாக்கப்படவுள்ளது. அதற்குள் மத்திய வங்கி, வணிக வங்கிகள் மற்றும் ஏனைய வங்கிகள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் அரசிற்குக் கடன் வழங்கியுள்ள மேலும் 4 நிறுவனங்கள் உள்வாங்கப்படும் என்று பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க தெரிவித்தார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நேற்றையதினம் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு ☞2

## மின்சாரம் தாக்கி விவசாயி சாவு!

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னவத்தை எனும் கிராமத்தில் மின்சாரம் தாக்கி வியாழக்கிழமை ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் 28 வயதுடைய கொணா கொல்ல பகுதியைச் சேர்ந்த, இ.ஜி.சஜிந்த றங்கண என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை கொணா கொல்ல பகுதியிலிருந்து சின்னவத்தையில் தான் மேற்கொண்டிருந்த வேளாண்மைச் செய்கையை பார்வையிடுவதற்காக வந்துள்ள நிலையில் வயல் பாதுகாப்புக்காக போடப்பட்டிருந்த மின்சாரக்கம்பியில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் ☞2

## மோ. சைக்கிள்கள் மோதிய விபத்தில் இருவர் உயிரிழப்பு



யாழ்.நகரப் பகுதிக்கு அண்மையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் சம்பவ இடத்திலையே உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணம் - அராலி, வட்டுக்கோட்டை வீதியில் கல்லுண்டாய் வெளி பகுதியில் நேற்று மதியம் இந்த விபத்து இடம்பெற்றது. வேகமாக வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு ☞2

## நிதிக் குழுவில் முடிவில்லை

அரச நிதிக்குழுவின் தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை என்பதோடு எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு கருத்துக்களை வெளியிடுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

அரச நிதிக்குழுவின் கூட்டம் நேற்றைதினம் நாடாளுமன்றக் குழு அறையில் அதன் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் நடைபெற்றது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், ஊழியர் சேமலாப நிதியத்தின் அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் ☞2

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு இல்லையேல் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பும் முடியாது

### விளக்குகிறார் நிதி அமைச்சு செயலாளர்

உள்நாட்டு கடனை மறுசீரமைக்கத் தவறினால் வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைக்க முடியாமல் போகும். தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தினை ஆரம்பித்துள்ளோம். நாம் கடன் மறுசீரமைப்புக்களை செய்யாவிட்டால் மேற்படிச் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படும். அவ்வாறு நடந்தால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குரியாகிவிடும் என்று நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்தார்.


உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நேற்றையதினம் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போது உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான யோசனை அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைச்சரவை அனுமதியும் ☞2

**முன்னாள் இராஜாங்க அமைச்சர்**

## விஜயகலா மகேஸ்வரன் நேற்று விபத்தில் காயம்



புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் மங்கள வெளி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 5.40 மணியளவில் இடம்பெற்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நால்வரும் ☞2

## ஊழியர் சேமலாப நிதி மீது கைவைக்கப்போவதில்லை

### மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க.

- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு குறைந்தபட்சம் 9சதவீத வட்டி
- வங்கித்துறை சரிந் தால் மோசமான விளைவு ஏற்படும்
- பணப்புழக்கத்தை கட்டுப்படுத்தவே வங்கி விடுமுறை அறிவிப்பு

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின்போது ஊழியர் சேமலாப நிதியத்தின் மீது கைவைக்கும் எண்ணம் இல்லை. அத்தோடு குறைந்தபட்சம் 9 சதவீதமான வட்டிவீதத்தினை உறுதிப்படுத்த முடியும் எனவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்

50 சதவீதத்திற்கும் அதிகமான வரி ஊடாகத் திறைசேரிக்கும், பொருளாதாரத்திற்கும் பங்களிப்புச் செய்யும் வங்கிக் கட்டமைப்பின் மீது தொடர்ந்தும் சுமையை அதிகரிக்கப் போவதில்லை என்றும், வங்கிக் கணக்கு வைப்பாளர்களின் 57 மில்லியன் வங்கிக் கணக்குகளையும் பாதுகாப்பதை உறுதிசெய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்கள, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, திறைசேரியின் செயலாளர் ஏ.கே. செனவிரத்ன ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

அங்கு ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சியாளர்களின் கடன்களை நிலையான தன்மைக்கு கொண்டு வர வேண்டுமெனில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள இணக்கப்பாடுகளுக்கமைய 10 வருடங்களுக்குள் ஒரளவு உறுதியான ☞2

## உள்ளூராட்சி தேர்தலை இரத்து செய்ய சட்ட மா அதிபருடன் ஆலோசனை

உள்ளூராட்சி மன்ற தேர்தலின் வேட்புமனுக்களை இரத்துச்செய்வது தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள யோசனை குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்ற தேர்தலின் வேட்புமனுக்களை இரத்துச் செய்வது தொடர்பாக எமது அமைச்சின் சட்டப்பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ☞2

## கிழக்குப் பல்கலை உபவேந்தர் பதவியிலிருந்து என்னை அகற்ற மிலேச்சத்தனமான விமர்சனம்

### அஞ்சேன் என்கிறார் துணைவேந்தர்

(அகீல்)

தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பதவியிலிருந்து என்னை அகற்றுவதற்காக காழ்ப்புணர்ச்சி கொண்ட சமூக விரோதிகள் என் மீதும் பல்கலைக்கழகம் மீதும் மிலேச்சத்தனமான குற்றச்சாட்டுக்களையும் விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றனர். இவற்றுக்கெல்லாம் நான் அஞ்ச மாட்டேன். ☞2

## இந்திய அயலுறவு அமைச்சருடன் கிழக்கு ஆளுநர் நேற்றுச் சந்திப்பு

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று இந்திய அயலுறவு அமைச்சர் கலாநிதி. சுப்பிரமணியம் ஜெய்சங்கரை சந்தித்துப் பேச்சு நடத்தினார்..

இந்தச் சந்திப்பு தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்தமை சிறப்பான விடயம். எங்களின் அபிவிருத்தி கூட்டாண்மை குறித்து ஆராய்ந்தோம். எதிர்கால ஒத்துழைப்பிற்கான வழிவகைகள் குறித்து ஆராய்ந்தோம். எங்கள் அயல்நாடுகளிற்கு ☞2

## ஜனாதிபதியின் அறிவுரை

எவரையும் கைவிடாத வகையில் 'அஸ்வெசும' திட்டத்தை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி அறிவுரை வழங்கியுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'அஸ்வெசும' சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டத்திற்காக நாடு முழுவதிலுமுள்ள பிரதேச செயலகங்களுக்கு 3.7 மில்லியன் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள் ☞2

## இனி இது .....

என்பது உள்ளிட்ட பல்வேறு சமாளிப்புப் பதில்களையும் கதைகளையும் மற்றைய வர்களுக்குக்கூறிவருகின்றது.

அவற்றில் ஒரு கதை இந்தத் திட்டத்தை கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் மற்றும் அதன் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஏற்று, திட்டத்தை முன்மொழிந்தார்கள் என்பது. நைனாமடு சீனித் தொழிற்சாலைச் செய்திகள் வெளிவந்து அது ரெலோவுக்கு அரசியல் ரீதியில் பாதிப்பான நிலையை ஏற்படுத்தத் தொடங்கிய ஆரம்பக் கட்டத்திலேயே இந்தக் கதை வெளிப்படத் தொடங்கிவிட்டது என்றாலும், மஞ்சள் பத்திரிகைக் கதை மாதிரியான ஒன்று என்று நாமும் இதனைப் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை.

ஆனால், இந்த விடயத்தோடு தொடர்புடைய அரச அதிகாரிகளுக்கும் இந்தக் கதையைக்கூறி அவர்களை நம்பவைத்து - மண்டையைக் கழுவி - அதை ஒரு பரப்புரையாக எடுத்துச் செல்லமுயன்றிருக்கிறார்கள் என்பதுநேற்றுத்தான்எமக்குத் தெரியவந்தது. அதாவது எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் பதவி வகித்த காலத்தில் தாய்லாந்துப் பிரதமருடன் நடந்த ஒரு சந்திப்பில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு முன்மொழிந்தார் என்பதுடன் சம்பந்தன் சுமந்திரன் ஆகியோர் இந்தத் திட்டத்தை முன்னர் முழுமையாக ஆதரித்தார்கள் என்பதுதான் அந்தக் கதை.

புற்றுநோய் போன்று மெல்ல ஊடுருவ விடப்பட்டிருக்கும் இந்தக் கதையின் உண்மைத்தன்மை என்ன என்பதை தலைவர் சம்பந்தரிடமே நேரில் கேட்டுத் தெளிவுபடுத்திக்கொள்ளலாம் என்று அவருடன் பேசியதில், அந்தக் கதை சுத்தப் பொய் என்பது தெரியவந்தது.

குறித்த விடயம் சம்பந்தமாக தன்னை மையப்படுத்தி விஷமத்தனமான கதைகளை சிலர் முன்னெடுப்பதாக கூறிய அவர், அவ்விதமான பொய்ப்பிரசாரங்கள் குறித்து பொதுமக்கள் விழிப்படைய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

"தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நான் உள்ளிட்ட ஏனைய எமது மக்கள் பிரதிநிதிகள் உலகத்தலைவர்கள், இராஜதந்திரிகளைச் சந்திப்பது வழக்கமானது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பல விடயங்கள் சம்பந்தமாக கவனம் செலுத்தப்படுவதுண்டு. எனினும், குறித்த சீனித் தொழிற்சாலை சம்பந்தமாக நானே எமது சக உறுப்பினர்களோ எவ்விதமான பேச்சுக்களையும் முன்னெடுக்கவில்லை.

அவ்விமாக வெளியிடப்படும் கருத்துக்கள் முற்றிலும் பொய்யானாவை. என்னை மையப்படுத்தி பரப்புரை செய்யப்படும் தவறான கருத்துக்களாகும். குறித்த கருமத்துக்கும் எனக்கும் எவ்விதமான தொடர்புகளும் கிடையாது. நான் வவுனியா மக்களின் ஆணையைப் பெற்ற பிரதிநிதியுமில்லை. அந்த மக்கள் குறித்த விடயம் சம்பந்தமாக என்னை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கோரவுமில்லை" என்றார்.

மக்கள் மட்டுமல்ல அதிகாரிகளும் கவனமாக இருக்கவேண்டும் இது போன்ற பொய்க் கதைகள் தொடர்பில்.

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## நிதிக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். இக்கூட்டத்தின்போதே மேற்கண்ட நிலைமை ஏற்பட்டது.

இதுகுறித்துஅக்குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டிசில்வா தெரிவிக்கையில், வெள்ளிக்கிழமை மீண்டும் குழுகூடவுள்ளது. இதன்போது முக்கிய அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளோம். அதன் பின்னரே இறுதித் தீர்மானத்தினை எடுக்கவுள்ளோம்.

ஊழியர்சேமலாபநிதியத்தின் நிதியே இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்த நிதியே அரசிற்கு கடனடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. எனவே கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளும்போது அது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டியது யார் என்பது பற்றியே இன்றைய கூட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

கடந்த காலத்தில் அரச நிதிக்குழுவே அது தொடர்பில் பெரும்பாலான தீர்மானங்களை எடுத்துள்ளமையால், தற்போதைய தீர்மானத்தினையும் அரச நிதிக்குழுவே மேற்கொள்ளவேண்டுமென உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாசவும் பங்கேற்றிருந்தார். எனினும், அவர் கருத்துக்களை வெளியிடுவதற்கு பெரும்பாலான உறுப்பினர்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். இதனால் அவர் அமைதியாக விடயங்களை அவதானித்தவாறு இருந்தார். அவருடைய பொறுமையை நான் மெச்சுகின்றேன் - என்றார்.

## ஆணைக்குழு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணத்திலக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக முன்னாள் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்கவும் ஏனைய உறுப்பினர்களாக எம்.ஏ.பத்மசிறி சந்திரவன்ச பெரேரா மற்றும் அமீர் மொஹமட் பாயிஸ் உள்ளிட்டவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.


## கொக்குத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)




பணி இடம்பெற்றுவருகின்றது. இதற்காகக் குழி தோண்டப்பட்டுக் கொண்டிருந்தபோது மனித எலும்புகள் மற்றும் அடைகள் பல ஆழத்தில் வெளிப்பட்டன.

முதல் பார்வைக்கு



மனிதப் புதைகுழி போன்று அது தோற்றமளித்ததைத் தொடர்ந்து பணியாளர்கள் அது குறித்து அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். பின்னர் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.



பொலிஸார் அந்தப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, குற்றப் பிரதேசமாக அடையாளப்படுத்தினர். முல்லைத்தீவு நீதவானின் கவனத்திற்கும் கொண்டு சென்றனர்.

இன்றைய தினம் நீதிவான் புதைகுழி என்று கருதப்படும் இடத்தை நேரில் பார்வையிட்டு அதனைத் தோண்டுவது தொடர்பில் முடிவெடுப்பார் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு மனித எச்சங்கள் காணப்படும் பகுதியில் ஆண்கள், பெண்களின் ஆடைகள் காணப்படுவதோடு அவ்வாறு காணப்படும் ஆடைகள் பலவும் இராணுவச் சீருடையை ஒத்த ஆடைகளாகவும் காணப்படுகின்றன என்று அவற்றை நேரில் பார்த்தவர்கள் கலைக்கதிர் பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

## 19.8 பில்லின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவிக்கையில்,

'சர்வதேசநாணயநிதியத்தின் உதவியை அரசாங்கம் பெற்றுக்கொள்ள தீர்மானித்தைத் தொடர்ந்து கடந்த செப்டெம்பர் மாதமளவில் நிறைவேற்றுக்குழு மட்டத்திலான இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு நாம் முயற்சித்தோம். எவ்வாறாயினும் இலங்கை கடன் நிலைத் தன்மையை ஏற்படுத்தும் வரையில் அந்த யோசனைக்கு அனுமதி அளிக்கமுடியாதெனசர்வதேச நாணய நிதியம் அறிவித்தது.

அதற்கமைய செப்டெம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து மார்ச் 20 ஆம் திகதி வரையில் அரசாங்கம் மற்றும் சர்வதேச கடன் வழங்குநர்களுக்கிடையில் நிதிசார் உறுதிப்பாட்டினை பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன.

எவ்வாறாயினும் மார்ச் மாதத்தின் இரண்டாம் வாரத்தில் அதனை நாம் சாத்தியமாக்கிக்கொண்டோம். அதற்கமைய மார்ச் 20 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியம் எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இணக்கம் தெரிவித்த பின்னர் 04 ஆண்டுகளுக்கான திட்டமொன்றை முன்னெடுக்க தீர்மானித்திருந்தோம்.

இதில் 05 பிரதான பிரிவுகள் காணப்பட்டன. முதலாவதாக வருவாய் அடிப்படையிலான பொது நிதி ஒருங்கிணைப்பு என்ற விடயம் குறிப்பிடப்பட்டது. 2020- 2021 வருடங்களில் இந்நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 8மூ சதவீமாக குறைந்து காணப்பட்டது. அந்த நிலையிலிருந்து மீள்வதற்கான பல காரணங்களும் அதனில் குறிப்பிடப்பட்டிருந்தன.

இரண்டாவது காரணியாக இலங்கையின் கடன் நிலைத்தன்மை இலங்கையில் இல்லை என்பதை நீண்ட காலத்திற்கு முன்பாகவே சர்வதேச நாணய நிதியம் கூறியிருந்த நிலையில், மூன்றாவதாக நிலையான விலைவாசிகள் காணப்படும் நிலையை நாட்டிற்குள் உருவாக்குவதாகும்.

நான்காவதாக நிதித்துறையின் நிலைத்தன்மையை பாதுகாக்க வேண்டும் என்றும் ஐந்தாவது விடயமாக ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டம் ஆகியவற்றிற்குள் அரசாங்கம் பிரவேசிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. இந்த இலக்குகளை அடைய சூட்சுமான வழிமுறைகளை பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

இவற்றில் கடன் மறுசீரமைப்பு தவிர்ந்த அனைத்து விடயங்களும் அரச கொள்கையின் ஊடாக நடைமுறைப் படுத்தப்படுகின்றது. தற்போது நாம் பேசுகின்ற 42.1 பில்லியன் டொலர் அளவிலான உள்நாட்டு கடன்களில் 19.8 பில்லியன் மாத்திரமே மறுசீரமைப்புக்கு உள்ளாக்கப்படவுள்ளது. அதற்கு மத்திய வங்கி, வணிக வங்கிகள் மற்றும் ஏனைய வங்கிகள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் அரசாங்கத்திற்கு கடன் வழங்கியுள்ள 04 நிறுவனங்கள் உள்வாங்கப்படும்.

இந்த நிறுவனங்களின் வாயிலான மறுசீரமைப்பு முயற்சிகளை கலப்பு முறையில் மேற்கொள்வதன் பலனாக அரசாங்கத்திற்கு குறிப்பிட்ட பலன்கள் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றார்.

## மின்சாரம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றர். (05)

## மோ. சைக்கிள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேர் மோதியதில் விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த, யாழ். போதனா வைத்திய சாலை தாதிய உத்தியோகஸ்தரான மகேஸ்வரன் மயூரன் (வயது 37) மற்றும் அவருடன் பயணித்த வாகனங்கள் பழுதுபார்க்கும் (மெக்கானிக்) அராலி மத்தியை சேர்ந்த ஜெயசுந்தரம் சரோஜன் (வயது 29) ஆகிய இருவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். -

## யாழ்ப்பாணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிதறுதேங்காய் அடித்து வழிபாடுகளில் ஈடுபட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான சிறிசேன நேற்றுக் காலையில் நல்லூர் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டார். சைவப் பண்பாட்டுடன் வேட்டி அணிந்துவந்திருந்தார் அவர்.

கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன, மைத்திரிபால சிறிசேனவின் புதல்வர் தஹாம் சிறிசேன உள்ளிட்ட பலரும் அவருடன் வந்திருந்தனர்.

வழிபாட்டுக்குப் பின்னர் ஆலயச் சூழலில் நின்ற முன்பள்ளி குழந்தைகள், வெளிநாட்டவர்களுடன் கலந்துரையாடினார் மைத்திரிபால.

தொடர்ந்து யாழ். ஆயர் மற்றும் ஸ்ரீ நாக விகாராதிபதி ஆகியோரையும் மரியாதை நிமித்தமாகச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசத்தை ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஆரியகுளம் ஸ்ரீ நாக விகாரைக்குச் சென்ற மைத்திரிபால வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் விகாராதிபதியையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

## உள்நாட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்துள்ளது. இதனை அரச நிதிக்குழுவில் சமர்பித்த பின்னர் வரும் சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அனுமதியை பெற்றுக் கொள்ளும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அரசாங்கத்தின் கடன்களை மறுசீரமைக்க வேண்டியது அவசியமாகும். தற்போதும் இலங்கையில் கடன்நிலைத்தன்மைஇல்லை எனசர்வதேசநாணயநிதியம் அறிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான தொடர்ச்சியான நடவடிக்கைளின்போது அரசாங்க கடனை மறுசீரமைக்க வேண்டியது அத்தியாவசியமாகும். அதன் கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்கள் என்ற இரு பகுதிகள் உள்ளன.

அதேபோல் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் உள்நாட்டு கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை அளித்துள்ளோம். அந்த வேலைத்திட்டத்தைவிரைந்து முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும் என்றார்.

அத்துடன், ஊடகவியலாளர் ஒருவர் 'கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் ஏற்பட்டுள்ள எண்ணங்களை மாற்ற முடியாது. அதனால் சரியான தகவல்களை சமூகத்திற்கு வழங்குவதற்கான திட்டம் உள்ளதா?' என்று எழுப்பிய கேள்விக்கு, இன்று நாம் செய்வதும் அதனைத்தான். எதிர்காலத்தில் என்ன நடக்கப்போகிறது என்பதை பலர் கேட்கிறார்கள். வங்கிகள் முடங்கிவிடுமா என்பதை போன்ற பல கேள்விகள் கேட்கப்படுகின்றன. இது கடினமான நிலைமையாகும். இன்று நாடு நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. அந்த சவால் இன்றும் முற்றுப் பெறவில்லை. நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்க இவ்வாறான வேலைத் திட்டங்கள் அவசியம்.

வங்கிகளை போன்றே ஊழியர் சேமலாப நிதியத்தையும் நாம் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். இவை அனைத்துக்கும் பாதிப்பு இல்லாத வகையிலேயே நாட்டை மேம்படுத்த வேண்டும். இந்த வேலைத்திட்டம் பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்துவோம். கிராம மக்களுக்கே இது பற்றிய தகவல்கள் சென்றடைய வேண்டும். வறிய மக்கள் இது பற்றி அறிய வேண்டும். அதேபோல் உள்நாட்டு கடனை மறுசீரமைக்கத் தவறினால் வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைக்க முடியாமல் போகும். தற்போது சர்வதேச நாணயநிதியத்தின் வேலைத் திட்டத்தினை ஆரம்பித்துள்ளோம். நாம் கடன் மறுசீரமைப்புக்களை செய்யாவிட்டால் மேற்படிச் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படும். அவ்வாறு நடந்தால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குரியாகிவிடும் - என்று பதிலளித்தார்.

## உள்ளூராட்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது நீதிமன்றில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் பரிந்துரையை பெற்றுக்கொண்டதன் பின்னர், அதனை அமைச்சின் நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டவுள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துசெய்யுமாறு, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள் சிலரால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தேவையேற்பட்டால் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்வது தொடர்பான சட்டமூலத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றத்தில் சமர்பிக்க முடியும் என்றார்.

## கிழக்குப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் சூளுரைத்தார்.

நேற்றுமாலை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக மண்டபத்தில் அவர் செய்தியாளர்களைச் சந்தித்து இந்த விடயத்தைத் தெரிவித்தார். பொறுப்பு வாய்ந்த அரசியல்வாதி ஒருவர்கூட இவ்வாறு சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்ந்து உண்மை நிலை அறியாது அபாண்டமாகக் கருத்து வெளியிட்டமை தொடர்பில் கவலையும் விசனமும் வெளியிட்டார்.

அண்மைக்காலமாக சில காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களால் சமூக வலைத்தளங்களிலும் பொது வெளிகளிலும் தமக்கெதிராகவும் பல்கலைக்கழகத்திற்கு மாசு கற்பிக்கப்படும் வகையிலும் விசமத்தனமாக வெளியிடப்படும் குற்றச்சாட்டுக்களுக்கும் விமர்சனங்களுக்கும் விளக்கமளிக்கும் வகையில் துணைவேந்தரால் இந்தச் செய்தியாளர்கள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

துணைவேந்த பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தொடர்ந்து விளக்கமளிக்கையில் தெரிவித்ததாவது:

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவனாக நுழைந்து இங்கேயே விரிவுரையாளராகவும் இருந்து துணைவேந்தர் பதவியும் பெற்று இன்றுவரை இந்தப் பல்கலைக்கழகத்தின் இருப்புடன் இணைந்து, ஈர்ப்பு அதிகம் கொண்டவனாக இருந்து வருகின்றேன்.

நான் இளைப்பாறும் வரை கௌரவமாகவும் இப்பல்கலைக்கழகத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்காகவும் அப்பணிப்புடன் சேவையாற்றுவதையே இலட்சியமாகக் கொண்டுள்ளேன்.

இந்தப் போலி வேடதாரிகளின் நாசகார நடவடிக்கைகளுக்காக என்னை நம்பியுள்ள இந்த உயர் நிறுவனத்தைக் கைவிடவும் நான் தயாரில்லை.

இப்பல்கலைக்கழகமும் பல்கலைக்கழக நிர்வாகமும் வினைத்திறனாகச் செயற்படுவதைப் பொறுக்கமுடியாதவர்களே இன்று சோடிக்கப்பட்ட விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் சமூக வலைத்தளங்களில்; கூடுதலாக முன்வைத்து வருகின்றனர்.

கடந்த இரு வருடகாலமாக இத்தகைய சமூகவிரோதிகளின் செயற்பாடுகளையிட்டு நான் பொறுமை காத்துவந்தபோதிலும் இனியும் உண்மைத்தன்மைகளைத் தெளிவுபடுத்தாமலிருக்க முடியாது. எனினும் எனக்குமான களங்கம் ஏற்படுத்தும் வகையில் தொடரும் இத்தகைய விசமத்தனங்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்பதிலும் நான் கவனம் செலுத்தி வருகின்றேன்.

சட்டரீதியாக எதனையும் எதிர்கொள்ள முடியாத, முகவர்களூடாகவும் இவ்வாறு கீழ்த்தரமான செயற்பாடுகளை முன்னெடுப்போருக்குத் தக்கபாடத்தைப் புகட்ட வேண்டும். எனது செயற்பாடுகளில் குறிப்பாகக் கல்விசார் நேர்மைத்தன்மை போலிகளைப் புறமுதுகுகாட்டி ஓடச்செய்யும்.

என்னையும் பல்கலைக்கழகத்தையும் பதற்றநிலையில் வைத்திருக்கவேண்டுமெனச் சிலர் நினைப்பது பகற்கனவாகவே முடியும் - என்றார்.

பல்வேறு விடயங் கள் தொடர்பிலும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் இதன்போது விலாவாரியாகத் துணைவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் சிறந்த விளக்கங்களை அளித்தார்.

## விஜயகலா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணித்த வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நால்வரும் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (02)

## இந்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



முதலிடம் என்ற கொள்கையில் இலங்கை முக்கியமான இடத்தில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளன. பரிசீலனையின் பின்னர் அவற்றில் 3.3 விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவர்களில் 'அஸ்வெசும' பலன்களைப் பெற்றுக் கொள்ளத் தகுதியானவர்கள் என்ற வகையில் மேன்முறையீடு மற்றும் எதிர்ப்புக்களை தெரிவிப்பதற்காக 2 மில்லியன் பேரின் பெயர்பட்டியலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் அலுவலக மட்டத்தில் மூவர் அடங்கிய தெரிவுக்குழுக்களின் கீழ் தகவல்கள் பரிசீலிக்கப்பட்டு மாவட்ட ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட பின்பே தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நலன்கள் கிடைக்கவேண்டும் என்கின்றபோதிலும், தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் தங்களது மேன்முறையீடுகளை ஜூலை 10 வரையில் சமர்பிக்கலாம்.

அதேபோல் சமூக நலன்புரித் திட்டங்களுக்கு தகுதியற்றவர்களின் விவரம் அடங்கியபட்டியலில் பெயரிடப்பட்டிருப்போர் தமது எதிர்ப்புக்களையும் முறைப்பாடுகளையும் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது மேன்முறையீடு மற்றும் எதிர்ப்பு வெளியிடுவதற்கான கடிதத்தை பிரதேச செயலகத்தில் கையளிக்க முடியும். அது தொடர்பில் பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இத்திட்டத்தை எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலும் தகுதியானவர்கள் எவரையும் கைவிடாத வகையிலும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார். அரச நியதிகளுக்கமைய செயற்படுமாறு பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்திற்கு இணையாக நடைமுறைப்படுத்தப்படும் பொது மக்களுக்கான கொடுப்பனவு திட்டங்களான முதியோர் கொடுப்பனவு 456,806 பேருக்கும், சிறுநீரக நோயாளர்கள் 19,496 பேருக்கும் , அங்கவீனமானவர்கள் 46,857 பேரும் உள்ளடங்களாக 523,159 பேருக்கான கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுப்பதற்கான பெயர் விவரங்கள் அடுத்த வாரத்தில் வெளியிடப்படவுள்ளது.

'அஸ்வெசும' சமூக நலன்புரித் திட்டத்தில் பதிவு செய்துக்கொள்ள முடியாவிட்டாலும் இதில் இணைந்துகொள்ள விரும்புவோருக்கு வருடாந்தம் வாய்ப்பளிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது - என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊழியர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன்மையைப் பேண வேண்டியது அவசியமாகும். உதாரணமாககூறுவதாயின் 2022ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மொத்த தேசிய உற்பத்தி வீதம் 128ஆக பதிவாகியது. இருப்பினும் 2032ஆம் ஆண்டில் அதனை 95 சதவீதமென்ற குறைந்த சதவீதத்திற்கு கொண்டு வர வேண்டியிருந்தது. அதுவே முதலாவது அளவுகோலாகும். அடுத்தாக ஆட்சியாளர்களின் வருடாந்த நிதிசார் தேவைகள் தற்போது 34.6 சதவீமாக காணப்படுகின்ற நிலையில் 2027- 2032 வரையான ஐந்து வருடங்களில் 13 சதவீதம் அல்லது அதற்கு குறைந்த மட்டத்திற்கு கொண்டு வர வேண்டியது அவசியமெனவும் மூன்றாவது அளவுகோலாக தற்போது 9.4ஆக காணப்படும் வெளிநாட்டு கடன் சேவைகளை 2027- 2032 வரையான காலப் பகுதியில் 4.5 சதவீமாக வரையறுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவித்தார்.

முதலில் உத்தியோக பூர்வமான கடன் மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டும். அது தொடர்பிலான பேச்சு இடம்பெற்ற வருகின்றன. அடுத்ததாக வணிக ரீதியில் தனியார் பிணைமுறிகளாகப் பெற்றுக் கொண்ட பணம், அது தொடர்பிலும் கலந்துரையாடப்படுகிறது. மூன்றாவதாக உள்நாட்டு கடன்கள் ஓரளவு மறுசீரமைப்புச் செய்தல் உள்ளிட்ட முயற்சிகள் ஊடாக கடன் நீடிப்புக்களை மேற்கொள்ள முடியும்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின்போது அரசின் மொத்த நிதித் தேவைக்காக (Gross Financial need) பெறப்படும் கடன்களை குறைப்பது அவசியமாகும். அதற்காக முன்வைக்கப்பட்ட யோசனைகளைசெயற்படுத்தினால் 12.7 சதவீதத்தினால் குறைத்துக்கொள்ள முடியும்.

தொடர்ச்சி 11 பக்கம் ...

காலைக்கதிர் Kalaikkathir

# அரசதுறை மறுசீரமைப்புக்களுக்கு ஒத்துழைப்பு வழங்க நியூஸிலாந்து நிபுணர்கள் குழு விரைவில் இலங்கை வரும்

அரசதுறை மறுசீரமைப்புக்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக நியூஸிலாந்தின் நிபுணர்கள் குழுவொன்று விரைவில்நாட்டுக்குவருகைதரவுள்ளது..

இலங்கைக்கான நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் எபல்டன் புதன்கிழமை பிரதமர் தினேஷ் குணவர்தனவை அலரிமாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்புக்களை மேலும் மேம்படுத்துமாறும் , கொழும்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒத்துழைப்புக்களை அதிகரிக்குமாறும் பிரதமர் தினேஷ் குணவர்தன இதன் போது கோரிக்கை விடுத்துள்ளார்.

மஹரகம இலங்கை பல் மருத்துவக் கல்லூரிக்கு நியூஸிலாந்து அரசாங்கத்தினால்வழங்கப்பட்டமானியத்தைநினைவு கூர்ந்த பிரதமர், அதற்கு வழங்கப்படும் வசதிகளை அதிகரிக்குமாறும் கோரிக்கை விடுத்தார். உயர்ஸ்தானிகர் அதனை ஏற்றுக்கொண்டதுடன், பல் மருத்துவக் கல்லூரியை மீண்டும் கண்காணித்து ஆதரவளிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் அரசதுறை சீர்திருத்த வேலைத்திட்டங்களுக்கு நிபுணத்துவம் வழங்க நியூஸிலாந்து தயாராக இருப்பதாக உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார். நியூஸிலாந்தின் முன்னாள் பொதுச் சேவை ஆணையாளர் தலைமையிலான குழுவொன்று விரைவில் இலங்கை வரவுள்ளமை தொடர்பிலும் அவர் குறிப்பிட்டார்.

காலாவதியான காணி கட்டளைச் சட்டத்தைதிருத்தவும்திட்டமிட்டுள்ளதோடு, பழங்குடியின மக்களின் காணி உரிமைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நியூஸிலாந்து அரசாங்கத்துடன் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் காலாவதியான காணிச் சட்டத்தை திருத்தியமைப்பதன் முக்கியத்துவத்தையும் பிரதமர் இதன் போது தெளிவுபடுத்தியுள்ளார்.

தற்போதைய பொருளாதார சவால்களைச் சமாளிப்பதற்கான இலங்கையின் நடவடிக்கைகள், கடன் மறுசீரமைப்பு, வர்த்தகம் மற்றும் முதலீடு, தேர்தல் சட்ட திருத்தம் தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (05)



## மரத்திலிருந்து விழுந்தவனை நான்கு தடவைகள் மாடு முட்டியது போன்றது அஸ்வெசும விவகாரம்

### சுனில் ஹந்துன்நெத்தி கூறுகிறார்



அஸ்வெசுமஎன்றபெயரில்சிரமமானதிட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு அது தற்போது மக்களுக்கான மூளைப் பிரச்சினையாக மாறியுள்ளது. மரத்திலிருந்து விழுந்தவனை நான்கு சந்தர்ப்பங்களில் மாடு முட்டியது போன்ற கதையே இதுவாகும். இதன் மூலம் நிவாரணம் பெற்றுக்கொள்ளவேண்டிய 11 லட்சம் மக்களின் கழுத்து நெரிக்கப்பட்டுள்ளதாகதேசிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

ஹிங்குரங்கொடயில் நடைபெற்றமக்கள்சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -


அஸ்வெசும என்றபெயரில் சிரமமான திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. உண்மையில் அது அஸ்வெசுமஅல்ல. மக்களுக்கான மூளைப் பிரச்சினையாக மாறியுள்ளது.

மேலும் கையிருப்பிலுள்ள நிதியைத் திருடும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இதன் மூலம் நிவாரணம் பெற்றுக்கொள்ளவேண்டிய 11லட்சம்மக்களின்கழுத்தே நெரிக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் நிவாரணங்களை வழங்காமல் வழங்க வேண்டியவர்களுக்கு மாத்திரம் வழங்குமாறு சர்வதேசநாணயநிதியம் கூறியது.

70 அலகுகளுக்கு மேல்மின்சாரத்தைபாவிக்கும் கொடுப்பனவுகள் நிபந்தனையின்றி வெட்டப்படுகின்றன. மரத்திலிருந்து விழுந்தவனை நான்கு சந்தர்ப்பங்களில் மாடு முட்டுவது போன்று கதையே இதுவாகும். மின்சார கட்டணத்தை செலுத்த முடியாது மக்கள் சிரமப்படும் பின்புலத்தில் தற்போது சமுர்த்தி கொடுப்பனவுகளும் வெட்டப்படுகின்றன. -என்றார். (05)

## அஸ்வெசும திட்டத்தில் யாருக்கும் அநீதி ஏற்பட இடமளிக்கமாட்டோம்

### ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் சமன் ரத்னப்பிரிய திட்டவட்டம்



அரசாங்கத்தின் நிவாரண திட்டத்தில் யாருக்கும் அநீதி ஏற்பட இடமளிக்கப்போவதில்லை. அதேபோன்று தகுதியற்றவர்களுக்கு வழங்குவதற்கும்இடமளிக்க மாட்டோம் என ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

அரசாங்கத்தின் அஸ்வெசும நிவாரண திட்டம் தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தில் இருக்கும் உறுப்பினர்கள்சிலரும்இதன் நடவடிக்கை தொடர்பாக குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அதேநேரம் அஸ்வெசும நிவாரணத் திட்டத்துக்கு விண்ணப்பித்தவர்களில்ஒரு லட்சத்து 88 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் மேன்முறையீடுசெய்திருக்கின்றனர். அதனால் இந்தத் திட்டத்தில் குறைபாடு ஏற்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

அத்துடன் நிவாரணம் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்து தகுதி இருந்தும் நிராகரிக்கப்பட்டிருந்தால், அவர்கள் அது தொடர்பில் முறையிடலாம். அதனைச் செய்யத் தெரியாதவர்கள் எங்களிடம் வந்து தகவல்களைத் தெரிவித்தால் அவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அதேபோன்று நிவாரணம்பெறுவதற்கு தகுதி இல்லாத பலரும் நிவாரணத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருக்கின்றனர் என 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதுதொடர்பில் விசாரணைமேற்கொள்ளப்பட இருக்கிறது. வசதி குறைந்த குடும்பங்களுக்குஅவர்களின் வாழ்வாதாரத்துக்கு உதவியாக, சர்வதேச நாணய நிதியத்தின்ஒப்பந்தத்துக்குஅமையவே இந்த நிவாரணம் வழங்கப்படுகிறது. அதனால் வசதிபடைத்தவர்கள் யாராவது இந்த திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தால், அவர்களை அந்த பட்டியலில் இருந்து நீக்குவதற்கும் நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

மேலும் விசேட தேவையுடையர்கள், சிறுநீரக பாதிப்பு, முதியோர்கள் மற்றும் நிரந்தர நோயாளர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்களை இந்த நிவாரணத் திட்டத்தில் இணைத்துக்கொள்ளாமல் அவர்களுக்குதனிப்பட்ட முறையில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எனவே அரசாங்கத்தின் நிவாரண திட்டம் கிடைக்கப்பட வேண்டியவர்களுக்கு கிடைக்கும் வகையில் முறையாக நடவடிக்கை எடுக்கப்படும். இதில் யாருக்கும் அநீதி ஏற்படுவதற்கு இடமளிக்க மாட்டோம். இன்னும் ஒரு மாத காலத்துக்குள் இந்தப் பிரச்சினைகளைத்தீர்ப்போம். அப்போது மக்கள் ரணில் விக்ரமசிங்கவுக்கு. நன்றி செலுத்துவார்கள். - என்றார். (05)

## பயனற்ற திட்டங்களுக்கு நிதி வழங்கமுடியாதாம்

ஆட்சியில் இருந்த பல அரசாங்கங்கள் முன்னெடுத்த அபிவிருத்தி செயற்திட்டங்களால் எவ்வித பயனும் கிடைக்கப் பெறுவதில்லை. மக்களுக்கு பயனளிக்காத அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குநிதிவழங்க முடியாது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் ஒன்றிணைந்த அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பில் நிதியமைச்சில் அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

2016 ஆம் ஆண்டு வெளிநாட்டு முகவர் நிறுவனத்தின் ஆதரவுடன் செயல்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டத்துக்கான செலவு 62.4 மில்லியன் யூரோவாக மதிப்பிடப்பட்டது. குறித்த திட்டத்தின் கீழ் நாட்டின் பிரதான நகரங்களில் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. இருப்பினும் இந்தக் கட்டடங்கள் தற்போது பராமரிப்பற்ற நிலையில் பயனற்ற வகையில் காணப்படுகின்றன.முறையான திட்டமிடல் ஏதும் இல்லாமல் இருந்தமை இந்த நிலைக்கான பிரதான காரணமாகும். பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகளில் மக்கள் பயன் பெறுவார்களா என்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

ஆட்சியில் இருந்த பல அரசாங்கங்கள்முன்னெடுத்த அபிவிருத்தித் திட்டங்களால் மக்கள் பயன்பெறவில்லை. ஆகவே, மக்களுக்கு பயனளிக்காத அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி வழங்க முடியாது. - என்றார். (05)

## பலங்கொட, சமனலவெள பகுதி வனப் பகுதிக்குள் நுழைந்து புதையல் தோண்ட முயன்ற 17 பேர் கைது



பலங்கொட,சமனலவெள பகுதியிலுள்ள வனப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து புதையல் தோண்டுவதற்கு முயற்சித்த 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சமனலவெள பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக வனப்பகுதிக்குள் திங்கட்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

சந்தேக நபர்கள் செவ்வாய்க்கிழமை இரவு சமனலவெள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்தின கொல்ல பிரதேசத்திலுள்ள வனப்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து கூடாரங்கள் மற் றும் தற்காலிக மலசல கூடங்களை அமைத்து புதையல் தோண்டுவதற்கு முயற்சித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக மேற்கொண்ட நீண்ட நேர சுற்றிவளைப்பின் பின்னர் சந்தேக நபர்கள் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 26 முதல் 54 வயதுக்கு இடைப்பட்ட பலாங்கொடை, ஒப்பநாயக்க, வெலிகேபுர, சமனலபுர, கல்தொட்டபுர பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

சந்தேகநபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்கு தேவையான இயந்திரங்கள், உபகரணங்கள், பூஜைப் பொருள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

மேலும் ஒரு வார காலத்துக்கு தேவையான உணவுப் பொருள்களை அவர்கள் எடுத்துக் கொண்டுள்ளதுடன், பல்வேறு பூஜைகளையும்மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறான வனப்பகுதிக்குள் அனுமதியின்றி அத்துமீறி நுழைவது தண்டனைக்குரிய குற்றமாகும். மேலும் தொல்பொருள் திணைக்களத்தின்மூலம்விடயம்தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கைகளை பெற்று சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

சம்பவம் தொடர்பில் சமனலவெள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். - என்றார். (05)

## விமானி பற்றாக்குறை, போதிய சம்பளமின்மை தொடர்பாகக் கூடுதல் கவனம் செலுத்துக!

### இலங்கை விமானிகள் சங்கம் கோரிக்கை

விமானிகள் பற்றாக்குறை மற்றும் சேவையிலுள்ள விமானிகளுக்கு போதியளவு சம்பளம் வழங்கப்படாமை தொடர்பாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை விமானிகள்சங்கம்அரசாங்கத்திடம்கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் குறித்த சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

விமானிகள் பற்றாக்குறையால் இலங்கை விமான சேவை பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. விமான சேவை முகாமைத்துவத்தால் முன்னெடுக்கப்படும் சில தீர்மானங்களால் விமானிகளான நாம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளோம்.

தற்போது இலங்கை விமான சேவைக்கு 330 விமானிகள் தேவைப்படுகின்றனர். எவ்வாறிருப்பினும் கடந்த ஆண்டு 70 இற்கும் மேற்பட்ட விமானிகள் சேவையிலிருந்து இடைவிலகியமையால் தற்போது விமானிகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக உரிய நேரத்தில் சேவைகளை முன்னெடுப்பதில் எழுந்துள்ள சிக்கலால், விமான பயணிகளான மக்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடுஇலங்கைவிமானசேவை துறைசார் நிபுணத்துவத்துக்கு பொருத்தமான சம்பளத்தை விட குறைவான சம்பளத்தையே வழங்குகின்றது.

கொவிட் நெருக்கடியின் பின்னர் சம்பளம் 50 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

எவ்வாறிருப்பினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட் டுக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருக்கின்றோம். இம்முறை இலங்கை விமான சேவை 50 மில்லியன் டொலர் இலாபமீட்டியுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது.

எனவே, தற்போது நிலவும் விமானிகள் பற்றாக்குறை மற்றும் சேவையிலுள்ள விமானிகளுக்கான சம்பளம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். - என்றுள்ளது. (05)

## இலங்கையின் வடக்குக் கிழக்கில் இந்துக்களின் எண்ணிக்கை குறைவடைவு; புதிதாக விகாரைகள்

### லண்டனில் அண்ணாமலை கவலை



இலங்கையின் வடக்கு, கிழக்கில் இந்துக்களின் எண்ணிக்கைகுறைவடைகின்றமை தொடர்பாகத் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கவலை வெளியிட்டுள்ளார்.

பிரிட்டன்நாடாளுமன்றத்தில் பிரபுக்கள் சபையில் ஆற்றிய உரையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவுகள் தொடர்பாக அண்ணாமலை உரையாற்றியுள்ளார்.

பிரிட்டனின்தமிழ்சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் இலங்கையின் வடக்கு, கிழக்கில் இந்துக்களின்எண்ணிக்கைகுறைவது குறித்து அண்ணாமலை கவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் இந்துக்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்கஅளவிற்குகுறைவடைந்துள்ளமை எனக்கு கரிசனை அளிக்கின்றது என அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இந்த போக்கு கவலையளிக்கும் விடயம். ஏனென்றால் எதிர்வரும் காலங்களில் இந்தபகுதிகளில்இந்துக்களின் கலாசாரத்துக்குபெரும்பாதிப்பு ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் பௌத்த தொல்பொருள் கட்டடங்கள்உருவாகிவருவது குறித்தும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

பல ஆயிரங்களாக இலங்கையின் வடக்கு கிழக்கு தனிப்பட்ட கலாசாரம் அடையாளம் ஆகியவற்றை பேணிவந்துள்ளன எனத் தெரிவித்துள்ள அண்ணாமலை, புதிதாக பௌத்த தொல்பொருள் கட்டடங்கள் இந்த பகுதியில் உருவாகிவருவது ஈழத்தமிழர்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் முறுகலை உருவாக்கியுள்ளது எனவும் அவர்தெரிவித்துள்ளார்.

எதிர்வரும்தசாப்தங்களில் நிரந்தரதீர்வைகாண்பதற்கும் அமைதியை ஏற்படுத்துவதற்கும்இந்தபிரச்சினைக்கு தீர்வை காண்பது அவசியம் என அண்ணாமலை தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கொக்குத்தொடுவாய் புதைகுழி குறித்து சந்தேகத்திற்கப்பாற்பட்ட நடவடிக்கை அவசியம்

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாயில் குடிதண்ணீர் குழாய்களைப் புதைப்பதற்காகத் தோண்டிய குழிகளில் மனித எலும்பு எச்சங்களும், சீருடையை ஒத்த ஆடைகளும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது தமிழர்கள் மத்தியில் பதற்றத்தை அதிகரித்திருக்கின்றது. இறுதிப் போரின்போது பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கானவர்களுக்கு என்ன நடந்தது என்பதே தெரியாதிருக்கும் நிலையில் இந்தப் புதைகுழி தொடர்பான தகவல்கள் தமிழ் மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்துவது புரிந்துகொள்ளக் கூடியதே.

இறுதிப்போரின் போது சரணடைந்தவர்கள், அரச படையினரிடம் அவர்களது உறவினர்களால் நேரில் ஒப்படைக்கப்பட்டவர்கள் என்று எவரும் உயிரோடு இல்லை என்று இலங்கையின் அரசியல்தலைவர்கள் ஏற்கனவே அறிவித்துவிட்ட நிலையிலும், இப்படிப் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் நிலையில் கொக்குத்தொடுவாய் புதைகுழியை இவற்றுடன் தொடர்புபடுத்தித் தமிழர்கள் பதற்றமடைவது இயல்பானதே.

எனவே இது குறித்த முழு உண்மைகளும் வெளி வருவதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தப் புதைகுழி தோண்டப்படும்போது பன்னாட்டுநிபுணர்களதும்பார்வையாளர்களதும்பங்கேற்பு உறுதிப்படுத்தப்படுவது அவசியம். அத்தோடு இந்த விசாரணைகள் விரைவாகவும் நிபுணத்துவத்தோடும் தொழில்நுட்ப வளங்களோடும் இடம்பெறுவதையும் அரசு உறுதிப்படுத்தவேண்டும்.

வடக்கில் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இடம்பெற்றிருக்கக்கூடிய பெரும் மனிதப் புதைகுழி அகழ்வு என்று யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில் இடம்பெற்ற அகழ்வுப் பணிகளைக் குறிப்பிடமுடியும். இது பன்னாட்டுப் பார்வையாளர்களின் கண்காணிப்பின் கீழேயே இடம்பெற்றது. அப்போது அரசுத் தலைவராக இருந்தவரான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கஅதற்கானஏற்பாடுகளைச்செய்திருந்தார்.

அந்தப் புதைகுழியில் நூற்றுக்கும் மேற்பட்ட சடலங்கள் புதைக்கப்பட்டன என்று, மாணவி கிருஷாந்தி கொலை வழக்கின் குற்றவாளியான தரைப்படைச் சிப்பாய் தெரிவித்தபோதும் 15 வரையான மனித உடல்களின் எச்சங்களே அங்கிருந்து மீட்கப்பட்டன. அவற்றின் மீட்புப் பணிகள் பன்னாட்டுத் தரத்திற்கு நிகராக இடம்பெற்றபோதும், பின்னாளில் அந்த வழக்கு கிடப்பில் போடப்பட்டு அதற்கு என்ன நடந்தது என்றே தெரியாத நிலைமையே இருக்கின்றது.

மீட்கப்பட்ட மனித எச்சங்கள்கூட மரபணு சோதனை போன்ற தொழில்நுட்ப முறைகளூடாக அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. குற்றவாளிகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஒரு மனிதப் பேரவலத்தின் முக்கிய சாட்சியமான செம்மணிப் புதைகுழிகளுக்கு நிகழ்ந்த அவலம் போன்றல்லாமல் நேர்மையாகவும், நேர்த்தியாகவும், வெளிப்படைத் தன்மையோடும் கொக்குத்தொடுவாய் விசாரணைகளை ஆட்சியாளர்கள் ஒழுங்குபடுத்தவேண்டும். தேவையான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திகொடுக்கவேண்டும்.

இறுதிப் போரின்போது விடைதெரியாத பல கேள்விகளுக்கு இந்த விசாரணைகள் சில சமயங்களில் வெளிச்சம் பாய்ச்சக்கூடும். எனவே வழக்கம்போன்று இதனையும் மூடிமறைத்து இருட்டிப்புச் செய்வதற்கு முயற்சிக்காமல் முழுமையான, விரிவான விசாரணைக்கு ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அது பன்னாட்டுத் தரத்துடன் இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

# இந்திரன் மாறினாலும்...

**என் சத்திய மூர்த்தி**

பிரித்தானியதலைநகர் லண்டனில் கருத்துக் கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே அண்டை நாடான இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் தரும் எந்த ஒரு முன்னெடுப்பையும் இலங்கை அரசு செய்யாது என்று மீண்டும் உறுதி கூறியுள்ளார். அதேசமயம், வடக்கு மாகாணத்தில் நைனாமடுவில் சீனி ஆலை அமைப்பதற்கு சீனாவிற்கு அவரது தலைமையில்கூடிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அத்துடன் அந்தச் சீனி ஆலை செயல்படுவதற்குத் தேவையான கரும்பு பயிர்செய்ய எழுபத்தையாயிரம் ஏக்கர் காணி கையளிக்கப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



இலங்கை அரசைப் பொறுத்த வரையில், அம்பாந்தோட்டைதுறைமுகம் ஆகட்டும், கொழும்பு துறைமுக நகரம் ஆகட்டும், தற்போது நைனாமடு சீனி ஆலை ஆகட்டும், இடையே, மீண்டும் வடக்கு மாகாணத்தில் மீன் உற்பத்தி செய்கை குறித்த பணிகள் ஆகட்டும்,



அவை அனைத்துமே சீனாவுடனான வர்த்தகரீதியான ஒப்பந்தங்களே. அவை இந்தியாவின் பாதுகாப்பிற்கு எந்தவித அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்தி விடாது என்பதுகொழும்பின் கருத்து.

ஆனால், இந்தியா போன்ற நாட்டின் பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்து தெளிவாக அறிந்துகொண்டு, அவற்றைப் புரிந்துகொண்டு, அதனடிப்படையில் தங்களது பல்வேறு கொள்கைகளையும் முன்னெடுப்புகளையும் செய்யுமிடத்தில் இலங்கை இல்லை. தற்போதுகூட, இலங்கை சீனாவிற்கு தலையையும் இந்தியாவிற்கு வாலையும் காட்டி விலாங்கு மீன் போல் நழுவி வரும் பழைய உத்திகளையே தொடருகிறது. இது போன்றே, கடந்த வருடம் யுவான் வாங்-5 என்ற சீனாவின் உளவு கப்பல் அம்பந்தோட்டை வந்து ஒரு வாரம் தங்கி இருந்ததை குறித்த இந்தியாவின் நியாயபூர்வமான கவலைகளை, இலங்கை அரசு நீர்த்துப்போகச் செய்யவே முயற்சித்தது. அதன் பிறகு, இந்தியா தனது பாதுகாப்பு கவலைகள் மற்றும்கரிசனங்கள் குறித்து இலங்கை அரசுடன் வெளிப்படையாக ஒவ்வொரு முறையும் விவாதிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

இதன் பொருள். இந்தியாவின் பாதுகாப்பு கவலைகள் குறித்து அறியாமலே, இலங்கை அரசு அது குறித்து ஒரு உறுதிப்பாட்டை தொடர்ந்து அளித்து வருகிறது. இதன் காரணமாகவே, அத்தகைய உறுதிமொழிகள், இந்தியாவைப் பொறுத்தவரை, அர்த்தமில்லாமல் போய்விட்டன. இன்னும் சொல்லப்போனால், இலங்கை தொடர்ந்து இந்தியாவை ஏமாற்றி வருகிறது என்று கருதுவோரின் எண்ணிக்கை தென்னிலங்கையிலேயே அண்மை காலத்தில் அதிகரித்துள்ளது என்று கருத இடமிருக்கிறது.

### ஒன்றும் தெரியாதா பாப்பா

இந்திரன் மாறினாலும் இந்திராணி மாறமாட்டாள். இது குறிப்பாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரச தலைமைகளையும் அவர்களை வழிநடத்தும் உயர்மட்ட அரசு அதிகாரிகளையும் குறித்து சொல்லப்படும் வசனம். கடந்த எண்பதுகளில் லண்டன் பிபிசி தொலைக்காட்சியில், ’எக்ஸ், மினிஸ்டர்’ மற்றும் ’எக்ஸ் பிரைம் மினிஸ்டர்’ என்ற தொடர்கள் பிரபலம். எவ்வாறெல்லாம், அரச அதிகாரிகள் தங்களுக்கு மேல் இருந்கும் அமைச்சர்களைப் பந்தாடுகிறார்கள் என்று பகடியாக விவரித்தார்கள்.

குறிப்பாக இந்தியா விடயத்தில், இலங்கையிலும் இதுவே தொடர்ந்து நடந்து வருகிறது. அதற்காக, தென்னிலங்கைஅரசியல்தலைமைகள் ஒன்றும் தெரியாதா பாப்பாக்கள், அவர்களை அதிகாரிகள்தான்தவறாகவழிநடத்துகிறார்கள் என்பதல்ல பொருள். தென்னிலங்கை தேர்தல் அரசியிலில், இந்தியா-எதிர்ப்பு ஓர் அங்கம். அறுபதுகளிலும் எழுபதுகளிலும் பின்னர் எண்பதுகளிலும்கூட இந்திய எதிர்ப்பையும் மையப்படுத்தி, ஜேவிபி, பிறந்து தொடர்ந்து செயலாற்றி வந்ததோ, அப்போதே நாட்டின் அப்போதைய இரு பெரும் கட்சிகளும் அந்த வாக்காளர்களைக் குறிவைத்து அரசியல் செய்ய வேண்டியது நிர்பந்தமானது. எண்பதுகளின் கடைசியில் ஜேவிபியின் இரண்டாவது கிளர்ச்சி அரச படைகளால் அழித்தொழிக்கப்பட்டபோதும்கூட அதன் வாக்காளர்களை ஐக்கிய தேசிய கட்சியும் சுதந்திர கட்சியும் தொடர்ந்து அரவணைத்தே வந்தன.

நகர்புற மத்திய தர வாக்காளர்களை ஐக்கிய தேசிய கட்சி பெருவாரியாக தன் கையில் வைத்திருந்ததென்றால், தென்னிலங்கையில் விவசாயிகளும் தொழிலாளிகளையும்சுதந்திரகட்சி குறிவைத்தது. சொல்லப்போனால், ஜேவிபி தொடங்கப்படுவதற்கு முன்னர், அவர்கள் சுதந்திர கட்சியின் வாக்காளர்கள். அல்லது, பிற இடதுசாரிக் கட்சிகளின் வாக்காளர்கள். அந்த வாக்காளர்களிடம் எஞ்சியிருந்த ஜேவிபி சார்பினையே மற்ற இருகட்சிகளும் போட்டி போட்டுக்கொண்டு தமதாக்கி கொள்ள முயன்றன. தற்போது, ராஜபக்ஷ மற்றும் சஜித் பிரேமதாசா தரப்பும் இதனை முன்னெடுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

கடந்த வருடம் அறகலயா போராட்டத்திற்கு பின்னர் ஜேவிபியின் அனுர குமார திசநாயகாவே நாட்டில் மிகவும் பிரபலமான தலைவர் என்று தனியார் கருத்து கணிப்புகள் சொல்லும்போது, அவருக்கு பக்கத்தில் பிற கட்சிகளின் வாக்காளர்கள் மீண்டும் சரிந்து விட்டாகள் என்பதே பொருள். அந்த வாக்காளர்களை தொடர்ந்து கவர, ரணில், மஹிந்த ராஜபக்ஷ மட்டுமல்ல, சஜித் பிரேமதாசாவும்கூட இது போன்ற இரட்டை வேடம் போடவேண்டியது காலத்தின் கட்டாயம்.



### நம்பவைத்து கழுத்தறுத்து...

இது இப்படி என்றால், வடக்கே முந்தைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ காலத்திலேயே, சீனத் தூதுவர் யாழ்பாணம் வந்தபோது, கோவிட் பெயரைச் சொல்லி, வட மாகாண மீனவர்களுக்கு உதவி வழங்கினார். தமிழர்களிடம் நல்லபெயர் சம்பாதிப்பதற்காக நல்லூர் கோவிலுக்கும் சென்றார். அவரை தொடர்ந்து, சீனாவின் துணை தூதுவர் கிழக்கு மாகாணம் சென்று வந்தார். அவரும் உதவிப் பொருள்கள் வழங்கினார். இந்த விடயங்களில் இலங்கை அரசு சீனா தூதுவரையோ அவரது துணை தூதரையோ தடுத்து நிறுத்தி இருக்க முடியாதுஎன்பதுஉண்மையே. ஆனால், யாழ்பாணம் வந்த அந்த தூதுவரை இந்திய கடல் எல்லை வரை பயணம் செல்ல அனுமதித்தது, அதற்கு இலங்கை கடற்படையின் ’போட்’ பயன்படுத்தப் பட்டது எல்லாம் எந்த விதத்தில் நியாயம் என்று தெரியவில்லை.

அப்போதும் சரி, முன்னர் அம்பாந்தோட்டம் மற்றும் கொழும்பு துறைமுக நகரம் விடயங்களிலும் சரி, அப்போதைய ராஜபக்சா ஆட்சிகளை எதிர்த்து தற்போதைய ஜனாதிபதி ரணில் குரல் எழுப்பவில்லை. சஜித்து-ம்தான். அதைவிட முக்கியமாக, ராஜபக்ஷக்களாலேயே வெறும் கட்டட காண்டிராக்டாக மட்டுமே கொடுக்கப்பட்டிருந்த அம்பாந்தோட்ட துறைமுகத்தை, சீனவிற்கு தொண்ணூற்றி ஒன்பது வருட குத்தகைக்கு கொடுத்தது, அன்று பிரதமர் பதவியில் இருந்த ரணில் விக்கிரமசிங்கேதான்.

கடந்த ஆண்டு இந்தியாவை பற்றி செயற்கை கோள் மற்றும் பிற தொழில்துட்பங்களால் வேவு பார்க்கும் வசதிபெற்ற கப்பலை இலங்கை கடல் எல்லைக்குள் அனுமதித்து, கடைசி வரை இந்தியாவை நம்ப வைத்து கழுத்தறுத்தது எல்லாம் நடைபெற்றது, ரணில் ஜனாதிபதியான பிறகுதான்.

ஆனால், இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் வர இலங்கை துணை போகாது என்ற வசனம் மட்டும் அவ்வப்போது, ஊறுகாய் போல முன்வைக்கப்படுகிறது. இவையெல்லாம் யாரை ஏமாற்ற?

### கசக்கும் உண்மை

தற்போதைய நிலையில், தென்னிலங்கை அளவிற்கு தமிழர் தரப்பிலும் இந்தியாவைக் காட்டிக் கொடுக்க சில தரப்புகள் முன் வந்துள்ளன என்ற உண்மை கசக்கும். நைனாமடு சீனி ஆலை விடயத்தில், ஜனாதிபதி ரணிலே தேவையான முன்னெடுப்புகளைச் செய்துள்ளார். அதற்குச் செல்வம் அடைக்கலநாதனின் தலைமையிலான ரெலோ அமைப்பும் ஆதரவாகச் செயல்பட்டுள்ளது.



இன்னும் சொல்லப்போனால், ரெலோ தலைவர் செல்வத்திற்கு அண்மைகாலத்தில் மிக நெருக்கமாகவுள்ள சுரேன் குருசாமியும் ஜனாதிபதி கூட்டிய மூத்த அதிகாரிகளின் கூட்டத்தில் காணொளி மூலம் பங்கு பெற்றிருந்தார் எனப் பத்திரிகை செய்திகள் தெருவிக்கின்றன. அது தவறான செய்தி என்று யாரும் இதுவரை மறுக்கவில்லை.

அந்தக்கூட்டத்தில்பங்குபெறுவதற்கு அவர் ஓர் அமைச்சர் அல்லர். அரசு அதிகாரி அல்லர், அல்லது சீனி ஆலை வரும் பகுதியில் கனகாலம் வாழ்ந்து வரும் மக்கள் பிரதிநிதியும் அல்லர். ஏன் ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினரும்கூட அல்லர். அவ்வாறென்றால், அந்தக் கூட்டத்தில் அவர் யாருடைய பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்? எந்த முகாந்திரத்தில் அவரை அந்த கூட்டத்தில் பங்குபெற ஆட்சியாளர்கள் அனுமதித்தனர்? இது குறித்து விளக்கமளிக்க ஆட்சியாளர்களும்ம் ஜனாதிபதியும் கடமைப்பட்டவர்கள். கேள்விகேட்க பிற தமிழ் கட்சிகள் உரிமையும் கடமையும் ஒருசேரப் பெற்றவர்கள்.

### மௌனம் சம்மதம்

இங்கு முக்கியமாக அறிய வேண்டிய விடயம், சுரேன் குருசாமியின் பின்னால், கட்சித் தலைமை இருக்கிறதா? அவ்வாறு இருந்தால், கட்சித் தலைவர் செல்வம் மக்களுக்கு விளக்கம் அளிக்கக் கடமைபட்டவர். அந்தச்செய்திகள்தவறுஎன்றால், அது குறித்தும் மக்களுக்கு அறிவித்தல் முக்கியமாகிறது. இல்லையென்றால், அவரது மௌனம் சம்மதமாகவே எடுத்துக்கொள்ளப்படும்.

இதற்கெல்லாம் காரணமிருக்கிறது. சுரேன் குருசாமி தமிழர் அரசியலுக்கு புதிது. அவர் கனகச்சிதமாக, ரெலோவுடன் இணைந்து அதன் செய்தித் தொடர்பாளர் ஆனார். பின்னர், செல்வம் அடைக்கலநாதன் தன்னை, தற்போது காணமால்போன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துணை தலைவராகப் பிரகடனப்படுத்திக் கொண்போது, குருசாமியும் தன்னைக் கூட்டமைப்பின் துணைப் பேச்சாளர் என்று அறிமுகப்படுத்திக்கொண்டார். ஆனால், கூட்டமைப்பில் அந்த இரண்டு பதவிகளுமே இருக்கவில்லை என்பதே உண்மை.

இங்கு விடயமே, சீனி ஆலை வரை சீனா ஆதரவாளராகத் தற்போது அறியப்படும் ரெலோ தலைமை, கடந்த ஆண்டில் பதிமூன்றாவது திருத்தத்தைச் செயல்படுத்த இலங்கை அரசிற்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்ற முன்னெடுப்பை கையிலெடுத்து, தன்னைஇந்தியாவின்ஆதரவாளர்களாக காட்டிக்கொண்டதுதான். அப்படியென்றால் ஏன் இந்த திடீர் மனமாற்றம்?

இதற்காகவெல்லாம், அண்மையில் சீனாவிற்குப் பயணம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் செல்வமும்பங்குபெற்றது குறித்துயாரும் கவலைப்படவோ சந்தேகப்படவோ தேவையில்லை. இவ்வாறு சீனாவின் செலவில் அந்த நாட்டிற்குப் பிற தமிழ்த் தலைவர்களும் கடந்த காலங்களில் சென்று வந்துள்ளனர். என்ன, அவர்களில் பெரும்பாலோர் தங்களது சீனப் பயணத்தை இரகசியமாக வைத்துக்கொண்டனர். செல்வத்தின் விடயத்தில்தான், சீனாவிற்கான பயணக்குழுவின் படத்தில் அவரும் இடம்பெற்றிருந்தார். அவ்வளவுதான்!

காலைக்கதிர் Kalaikkathir




காலைக்கதிர் Kalaikkathir

# அஸ்வெசுமவை அரசியலாக்க வேண்டாம்: அநீதியெனில் மேன்முறையீடு செய்யுங்கள்

## ஜீவன் கோரிக்கை



அஸ்வெசும சமூக நலன்புரி கொடுப்பனவை பெறுவதற்கு தகுதி இருந்தும் உத்தேச பெயர் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருக்காவிட்டால் அது தொடர்பில் எதிர்வரும் ஜுலை 10 ஆம் திகதிக்குள் மேன்முறையீடு செய்யுமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்களை வீதிகளுக்கு இறக்கி போராட்டங்களை நடத்துவதைவிட, அவர்களை மேன்முறையீடு செய்வதற்கு ஊக்குவிக்குமாறு அரசியல் பிரமுகர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன் எனவும் அமைச்சர் கூறினார்.

கொழும்பில் அமைச்சில் நடைபெற்ற ஊடகசந்திப்பின்போதே இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான பெயர் பட்டியலை தயாரிக்கும்போது பெருந்தோட்ட மக்கள் புறக்கணிக்கப்படக்கூடாது என்ற கோரிக்கை எம்மால் முன்வைக்கப்பட்டது. உலக வங்கி மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க ஆகியோருடனும் இது தொடர்பில் பேச்சு நடத்தி, தீர்வொன்றை பெற்றிருந்தோம்.

ஏனெனில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஈ.பி.எப், ஈ.டி.எப் பிடிபடுவதால் சமுர்த்தி கொடுப்பனவின் போது கடந்த காலங்களில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டனர். இம்முறை அந்த குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டது.

அஸ்வெசும திட்டத்தில் புறக்கணிப்பு இடம்பெற்றுள்ளது எனக் கூறி தலவாக்கலையில் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதன்பின்னணியில் அரசியல் சூழ்ச்சி உள்ளது என எண்ணத்தோன்றுகிறது. போலியான முறையில் தகவல்களும் பரப்பட்டு வருகின்றன. இதனை எம்மால் ஏற்க முடியாது.

அஸ்வெசும திட்டம் தொடர்பில் ஜுலை 10 ஆம் திகதி வரை மேன்முறையீடு செய்ய முடியும். 'ஒன்லைன்' ஊடாகவும், பிரதேச செயலகங்களிலும் அதனை செய்யலாம்.

தமது பெயர், பட்டியலில் இருந்து நீக்கப்பட்டால் மேன்முறையீட்டு உதவியை நாடலாம். தோட்டங்களில் இருந்து 52 வீதமானோர் இந்தத் திட்டத்துக்கு விண்ணப்பித்திருந்தனர். பெயர் இல்லாவிட்டால் எமக்கு தெரியப்படுத்துங்கள். இல்லையேல் நீங்களாகவே மேன்முறையீடு செய்யலாம். நாமும் தகவல்களைத் திரட்டி வருகின்றோம். எனினும், இந்த சமூகநலத்திட்டத்தையும் அரசியல் மயமாக்கி, மக்களை தூண்டிவிட்டு அரசியல் நடத்துவதற்கு சிலர் முற்படுகின்றனர். இது ஏற்புடைய விடயம் அல்ல. தவறுகள் இடம்பெற்றிருந்தால் மக்களை மேன்முறையீடு செய்வதற்கு ஊக்குவிக்க வேண்டியது அரசியல்வாதிகளின் பொறுப்பாகும். - என்றார். (05)

# இந்தியாவின் ஒத்துழைப்பினாலேயே இலங்கையின் மீட்சி சாத்தியமானது

## மிலிந்த மொரகொட புகழாரம்

இந்தியாவின் ஒத்துழைப்பால்மாத்திரமே சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனுதவியைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. இலங்கை கடும் நெருக்கடிகளை எதிர் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்தியா உதவியளித்திருக்காவிட்டால் மிக மோசமான பொருளாதார சவால்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டிருக்கும் என்று இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்த போது , இந்தியா சுமார் 400 கோடி டொலர் கடனுதவியையும் , மேலும் பல நிவாரணங்களையும் வழங்கியுள்ளது.

உண்மையில் அந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியா ஆதரவளித்திருக்காவிட்டால் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனுதவியைப் பெற்றிருக்க முடியாது.

1948 ஆம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் இலங்கை கடந்த ஆண்டு பாரதூரமான பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொண்டது.

இதன்காரணமாக முதன் முறையாக கடன்களை மீள செலுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அறிவிக்க வேண்டிய நிலைமை இலங்கைக்கு ஏற்பட்டது.

அந்நிய செலாவணி பற்றாக்குறையால் இலங்கை தூயில் பணவீக்கம் உயர்வடைந்தமை , மின்சாரத்துக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டமை , மருந்து, எரிபொருள் உள்ளிட்ட பிற அத்தியாவசிய பொருள்கள் என்பவற்றின் இறக்குமதிகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டன.

எவ்வாறிருப்பினும் அந்த நிலைமைகளிலிருந்து இலங்கை படிப்படியாக மீட்சிக்கான பாதையில் பயணிக்கத்தொடங்கியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜுலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் தொடர்பாக அவர் தெரிவித்துள்ளபோதிலும் , அது தொடர்பில் விரிவான விவரங்களை வெளியிடவில்லை. (05)

# தண்டவாளங்களில் பொருத்தப்பட்ட ஆணிகளை அகற்றும் போதைப் பொருள் பாவனையாளர்கள்

## முறைப்பாடு கோருகிறது ரயில்வேத் திணைக்களம்

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் போதைப்பொருளுக்காக ரயில்வேத் தண்டவாளங்களில் உள்ள ஆணிகள், இரும்புத் துண்டுகள் ஆகியவற்றை அகற்றுவதால் பெரும்பாலான ரயில்கள் தடம் புரள்கின்றன. இவ்வாறானவர்கள் தொடர்பில் பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்க வேண்டும் என ரயில்வேத் திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் வி.எஸ்.பொல்வத்தகே தெரிவித்தார்.

ரயில்வேத் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் கொஸ்கம நோக்கி புறப்பட்ட பயணிகள் ரயில் பேஸ்லைன் ரயில் நிலையத்துக்கும் கோட்டே ரோட் ரயில் நிலையத்துக்கும் இடையிலான பகுதியில் தடம் புரண்டது.

ரயில் என்ஜின் உட்பட மூன்று ரயில் பெட்டிகள் இவ்வாறு தடம் புரண்டன. இதனால் களனிவெளி பாதையின் ரயில் சேவைகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டன.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் போதைப்பொருளுக்காக தண்டவாளங்களில் பொருத்தப்பட்டுள்ள ஆணிகள், இரும்புத் துண்டுகள் ஆகியவற்றை அகற்றுகிறார்கள். இவ்வாறான சம்பவம்தான் பேஸ்லைன் - கோட்டே ரோட் ரயில் நிலையத்தை அண்மித்த ரயில் பாதையில் இடம்பெற்றுள்ளது. இதனால் ரயில் தடம் புரண்டது.

போதைப்பொருள் பாவனையாளர்கள் தாம் செய்வது எவ்வளவு பெரிய பாரதூரமான செயல் என்பதை அறிவார்களா என்பது சந்தேகத்துக்குரியது. இவ்வாறு வெறுக்கத்தக்க செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் பொதுமக்கள் பொலிஸ் நிலையங்களில் அல்லது ரயில் பாதுகாப்பு தரப்பினரிடம் முறைப்பாடு அளிக்க வேண்டும். - என்றார். (05)

# ஹற்றன் நோர்வூட் பகுதியில் இறந்த நிலையில் சிறுத்தை மீட்பு

ஹற்றன்நோர்வூட்பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இன்ஜெஸ்ட்ரி தோட்டத்தில் செவ்வாய்க்கிழமை மாலை மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் சிறுத்தையின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

தோட்டத் தொழிலாளி ஒருவர் வழங்கிய தொலைபேசி அழைப்பின் பேரில், பொலிஸாரும் நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகளும் சம்பவ இடத்திற்குச்சென்று பார்த்தபோது தோட்டத்திலுள்ள தேயிலை புதருக்கு அருகில் உயிரிழந்த நிலையில் சிறுத்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சிறுத்தை உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. சிறுத்தையின் சடலம் ரந் தெனிகல கால்நடை வைத்திய பிரிவுக்கு கொண்டுச்செல்ல நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# துப்பாக்கி வெடித்து உயிரிழந்த சிறுவன்; மட்டு. வாகரையில் மூன்று பேர் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை, கட்டாமுரி பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் வைத்து துப்பாக்கி ஒன்று தவறுதலாக வெடித்ததில் 14 வயது சிறுவன் உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவன் தனது சகோதரர் மற்றும் இரண்டு மைத்துனர்களுடன் வேட்டையாடச் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் சிறுவனுடன் வேட்டையாடச் சென்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் அஸ்வெசும திட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மேன்முறையீடு செய்யுங்கள்

## மாவட்ட பதில் செயலர் க.கனகேஸ்ரவரன் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசின் அஸ்வெசும திட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மேன் முறையீடு செய்யுங்கள் என முல்லைத்தீவு மாவட்டத்தில் பதில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்ரவரன் தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும கொடுப்பனவில் பெயர் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து புதன்கிழமை கேப்பாபிலவு மக்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கூடி மாவட்ட செயலக வாயிலை மூடி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்கள்.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்டத்தில் பதில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்ரவரன், முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசின் அஸ்வெசும திட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களிடம் குறித்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

முல்லைத்தீவு மாவட்டத்தில் 23ஆயிரத்தி 901 குடும்பங்கள் சமுர்த்தி பயனாளிகளாக இருந்துள்ளார்கள். அதில் 16 ஆயிரத்து 211 குடும்பங்களுக்கு சமூக நலன்புரிசபையின் நன்மைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதனால் ஏற்கனவே சமுர்த்தி நன்மையை அனுபவித்த மக்கள் விடுபட்டுள்ளார்கள் மாற்றுவலுவுடையவர்கள் பெண்களை தலைமைத்துவமான குடும்பங்களுக்கும் விடுபட்டுள்ளார்கள் அவர்களிடம் இருந்து மேல்முறையீட்டைப்பெற்றுக்கொள்ளும் முகமாக கிராம அலுவலகர் அலுவலகங்களில் முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோன்று ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் விசேடகரும பீடம் அமைக்கப்பட்டு மேன்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. பாதிக்கப்பட்ட பொதுமக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருப்பார்களாக இருந்தால் மேன்முறையீடுகளை மேற்கொள்ளலாம் இணையத்தளத்திலும் முறையிடலாம்.

ஏற்கனவே வெளியிடப்பட்ட பெயர் விவரத்தில் பல வசதியானவர்களும் உள்வாங்கப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அது தொடர்பிலான ஆட்சேபனையை பொதுமக்கள் நேரடியாகவே இணையத்தளம் ஊடாகவோ தெரியப்படுத்துவதன் ஊடாக மேன்முறையீட்டு சபை ஆய்வு மேற்கொண்டு தகுதியானவர்கள் விடுபட்டிருந்தால் அவர்களை உள்ளீர்க்ககூடியதாக இருக்கும்.

நலன்புரி சமூக நன்மைகள் குறிப்பிட்ட விதம் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களுக்கே கிடைக்கவுள்ளதால் தகுதியற்றவர்கள் உள்ளீர்க்கப்பட்டிருந்தால் அவர்கள் தொடர்பான விவரங்கள் கிடைக்கப்பெறும் இடத்து ஆய்வு செய்து அவர்களை நீக்கி தகுதியானவர்களை உள்ளீர்ப்பதற்கான சந்தர்ப்பம் இருக்கின்றது.

எதிர்வரும் ஜுன்மாதம் 10 ஆம் திகதிவரை மேன்முறையீட்டை மேற்கொள்ளலாம் இன்னும் சில முறைப்பாடுகள் எங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

சிலதகுதியானகுடும்பங்கள்கூடசமூக நலன்புரிதிட்டத்தில்விண்ணப்பிப்பதற்குத் தவறிவிட்டுள்ளார்கள். அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் மேன்முறையீடு செய்ய வாய்ப்புக்கள் இல்லாவிட்டாலும் எதிர்வரும் ஆவணி மாதம் அளவில் விடுபட்டவர்களுக்கான மேல்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பமும் இருக்கின்றது. இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் நன்மை பெறமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# குதூகலப் பெருநாள்







(அகீல்)

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முஸ்லிம்மக்கள் ஈதுல்அழ்ஹா எனப்படும் ஹஜ்ஜுப் பெருநாளை குதூகலமாக நேற்றுக் கொண்டாடினர்.

பெருநாள் தினத்தின் முக்கிய நிகழ்வாக ஜும்ஆ பள்ளிவாசல்களிலும், திறந்தவெளிகள் மற்றும் மைதானங்களில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைகளும், ஹஜ்ஜுப் பெருநாள் குத்பா பிரசங்களும் இடம்பெற்றன. இந்த நிகழ்வுகளில் பெருந்தொகையான முஸ்லிம்கள் கலந்து கொண்டதுடன், பிரத்தியேகமாகப் பெண்களுக்கென இட ஒதுக்கீடு செய்யப்பட்டு பெருமளவான முஸ்லிம் பெண்களும், பெருநாள் தொழுகை, குத்பா பிரசங்கங்களில் கலந்து கொண்டனர்.

இதேவேளை நிந்தவூர் ஜாமிஉத் தௌஹீத் ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டிலான ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசியப் பாடசாலைமைதானத்தில் இடம்பெற்றன. ஜாமிஉத் தௌஹீத் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் மௌலவி. இத்ரீஸ் ஹஸனின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற பெருநாள் தொழுகையிலும், குத்பா பிரசங்கத்திலும் பெருமளவு ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர்.

மௌலவி எம்.எச்.எம்.றியால் (காஸிபி) பெருநாள் தொழுகையையும், குத்பா பிரசங்கத்தையும் நடத்தினார்.




# திருக்குறளில் பேதை

கி.பி 3ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 6ஆம் நூற்றாண்டு வரையான சங்கமருவிய காலத்தில் எழுந்த அற இலக்கியங்களுள் திருக்குறள் உன்னதமானது. திருக்குறளை பொய்யாமொழிப்புலவர், தெய்வப்புலவர் எனச்சிறப்பிக்கப்படும் திருவள்ளுவர் எழுதியுள்ளார். இத் திருக்குறளானது உத்தரவேதம், உலகப்பொதுமறை, திரு வள்ளுவம், தெய்வநூல் எனப் பல்வேறு பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றது. இத்திருக்குறளில் அன்பு, நட்பு, வாய்மை, அறிவு முதலான பல்வேறு விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

திருக்குறளைத் திருவள்ளுவர் அறத்துப்பால், பொருட்பால், காமத் துப்பால் என மூன்று வகைகளாகப் பிரித்து அறத்துப்பாலினும் இல் லறம், பாயிரம், துறவறம், ஊழ் ஆகிய மனித வாழ்வின் வெவ்வேறு படிநிலைகளையும் பொருட்பாலினுள் அங்கவியல், அரசியல் சார்ந்த விடயங்களையும் காமத்துப்பாலினுள் கற்பியல், களவியல் சார்ந்த விடயங்களையும் கூறியுள்ளார். இத்திருக்குறளானது 133 அதி காரங்களை உடையது. இவ் ஒவ்வொரு அதிகாரத்தினுள்ளும் 10 குறட்பாக்கள் வீதம் மொத்தமாக 1330 குறட்பாக்கள் உள்ளன. இக்குறட்பாக்கள் ஒவ்வொன்றும் முதல் அடியில் 4 சீர்களையும் இரண்டாம் அடியில் 3 சீர்களையும் கொண்டிருக்கும். இதிலுள்ள 84வது அதிகாரம் 'பேதமை' ஆகும். இவ் அதிகாரத்திலுள்ள 831 - 840 வரையான குறட்பாக்கள் பேதமை பற்றிக்குறிப்பிடுகின்றன.

'பேதமை' என்றால் அறியாமை, அதாவது எது சரி, எது பிழை என்று எதையுமே அறியாது இருத்தல் ஆகும். இவ்வாறு எதையுமே அறியாதிருப்பவரை 'பேதை' என அழைப்பர். இப்பேதையின் இயல்புகள், தொழில்கள் எனப் பல்வேறுபட்ட விடயங்களைப் பேதமை எனும் அதிகாரத்தில் காணலாம்.

**'பேதமை என்பது ஒன்றுயாதெனின் ஏதம்கொண்டு**
**ஊதியம் போக விடல்' (குறள் - 831)**

அறியாமை என்றால் என்னவெனின் யாதேனும் ஒரு செயலை ஆற்றும்போது அதன் விளைவாகக்கிடைக்கும் தீய பயன்களை உள்ளெடுத்து நற்பயன்களை தேவையற்றது எனக்கருதி விட்டுவிடல் என்றார் வள்ளுவர். அதாவது அறிவுடையோர் யாதேனுமோர் செயலைச்செய்தால் அச்செயலை மேற்கொள்வதால் கிடைக்கும் தீய பயன்களை விடுத்து நற்பயன்களை மாத்திரம் அன்னம்போல் எடுத்துக்கொள்வார். ஆனால் ஒரு அறிவிலி அப்படியல்ல, யாதேனு மோர் செயலை மேற்கொண்டால் அச்செயலைச் செய்வதால் கிடைக்கும் நற்பயன்களை தேவையற்றதெனக்கருதி அதனை விடுத்து தீய பயன்களை மாத்திரமே பண்ணாடையினைப்போல் எடுத்துக்கொள்வர். இதுவே பேதமை ஆகும்.

**'பேதமையுள் எல்லாம் பேதமை காதன்மை**
**கையல்ல தன்கண் செயல்' (குறள் - 832)**

அறியாமை எல்லாவற்றுள்ளும் அறியாமை என்னவென்றால் தனக்கு விரும்பத்தகாத ஒரு செயலை செய்யத்தொடங்கி அச்செயலைப் பொருத்தமற்ற முறையில் செய்து முடித்தல் என்றார் வள்ளுவர். அதாவது அறிவுடையோர் யாதேனுமொரு செயலைச் செய்யும் முன்னர் நான் ஏன் இதனைச் செய்கிறேன்? நான் இதனைச்செய்வதால் விளைவது நன்மையா? தீமையா? எனப் பல்வேறுபட்ட விடயங்களையும் அலசி ஆராய்ந்து தாம் செய்யும் விடயத்தினைத் திட்டமிட்டு தி ட்டமிட்டபடியே வெற்றிகரமாகச் செய்து முடிப்பர். ஆனால் ஒரு அறிவிலி அப்படியல்ல. தனக்கு முன்னால் இருப்பவன் இப்படிச்செய்கிறான், ஆதலால் தானும் அப்படிச்செய்வோம் என செம்மறியினைப்போல் பத்தாவதோடு சேர்ந்து பதினோராவதாக அச்செயல் தனக்குப் பொருந்தாத ஒன்றாக இருந்தாற்கூட அச்செயலை செய்யத்தொடங்கி



அச்செயலைப் பயனற்ற விதத்திலேயே முடிப்பர்.

**'நாணாமை நாடாமை நார்இன்மை யாதொன்றும்**
**பேணாமை பேதை தொழில்' (குறள் - 833)**

நாண வேண்டியவற்றிற்கு நாணாமை, நாட வேண்டியவற்றிற்கு நாடாமை, யாரிடத்திலும் அன்பு செலுத்தாமை, பேணிப்பாதுகாக்க வேண்டியவற்றைப் பேணிப்பாதுகாக்காமை இவை அனைத்தும் பேதையின் தொழில் என்கிறார் வள்ளுவர். அதாவது அறிவுடையோர் நாணவேண்டியபபழிபாவங்களைக் கண்டு அஞ்சுவர், நாடிப்பெறவேண் டிய அறிவு, நற்பண்புகளை நாடிப்பெறுவர். உன்னைப்போல உன் அயலானையும் நேசி என்பதன்படி அனைவரிடமும் அன்பு செலுத்து- வர். பேணிப்பாதுகாக்க வேண்டிய பொருட்களை தக்கபடி பேணிப் பாதுகாப்பர். ஆனால் அறிவிலியோ பழிபாவங்களுக்கு நாணமாட்டார்கள், நாடிப்பெறவேண்டிய விடயங்களை நாடிப்பெற மாட்டார்கள். தனது உறவினரிடத்தில்கூட அன்பு செலுத்த மாட்டார்கள். பேணிப்பாதுகாக்க வேண்டியவற்றைப் பேணிப்பாதுகாக்க மாட்டார்கள். இவைகளே இப்பேதையரின் தொழில்கள் ஆகும்.

**'ஓதிஉணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தான்அடங்காப்**
**பேதையின் பேதையார் இல்' (குறள் - 834)**

நூல்களை ஓதியும், அவற்றைப் பிறரிற்கு எடுத்துக் கூறியும் தான் அதன்படி ஒழுகாத அறிவிலியைப்போல் வேறொரு அறிவிலி இல்லை என்றார். அதாவது அறிவிலி மனம், மொழி, மெய் அடங்குவதற்குரிய நூல்களைஎல்லாம்கற்று அவற்றை அடக்குவதால்வரும்பயன்களையும் உணர்ந்து தான் கற்றவற்றை ஏனையோர்க்கு அறிவுரையாகவோ, ஆலோசனையாகவோ எடுத்துக்கூறியும் ஊருக்கு உபதேசம் உனக்கு அல்லடி என்பதன்படி தான் அதன்படி ஒழுகமாட்டார். இவ்வாறு உள்ள அறிவிலியே அறிவிலி எல்லாவற்றுள்ளும் அறிவிலி ஆவார்.

**'ஒருமைச்செயல் ஆற்றும் பேதை எழுமையும்**
**தான்புக்கு அழுந்தும் அளறு' (குறள்- 835)**

பேதை ஒரு பிறவியிலேயே 7 பிறப்பிலும் பிறந்து வருந்தக்கூடிய வினைகள் ஆற்றும் என்றார். அதாவது பேதை ஒரு பிறப்பில் ஆற்றும் வினைகள் அடுத்தடுத்துப் பிறக்கும் 7 பிறப்புக்களிலும் மெய் வருந்தி, கண்ணீர்விட்டுக் கதறி செய்த வினைக்கு தகுந்த பலனை அனுபவிக்கவைக்கும், அந்தளவிற்கு பேதை தொடர்ந்து செய்யக்கூடாத கடும் நரகத்திற்குரிய வினைகளையே ஆற்றுவர்.

**'ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை**
**பெருஞ்செல்வம் உற்றக் கடை' (குறள் + 836)**

பேதை தான்முன்பு செய்த வினைப்பயனால் பெரும் செல்வத்தை உற்றால் தனக்கு எவ்வித தொடர்புமற்றவர்கள் அச்செல்வத்தைப் பயன்படுத்தி பயனடைய உற்றார் உறவினர் அனைவரும் பசியால் வருந்துவர்.

**'மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்**
**கையொன்று உடைமை பெறின்' (குறள் - 837)**

ஏற்கனவே பித்துப்பிடித்து பகுத்தறிவை இழந்த ஒரு பைத்தி யக்காரன் கள் குடித்துவிட்டு எவ்வாறு மயங்கிக்கிடப்பானோ அவ்வாறே பேதையும் யாதேனுமொரு பொருளை உடைமையாகப்பெறின் நடந்துகொள்வான் என்றார்.

**'பெரிது இனிது பேதையர் கேண்மை**
**பிரிவின்கண் பீழைதருவது ஒன்றுஇல்' (குறள் - 838)**

பேதை ஒருவருடன் ஒருவர் நட்புக்கொண்டால் நட்புக்கொண்டவர் பிரிய ஏற்படும் தருணத்தில் பிரியும்போது நட்புக்கொண்டவருக்கு எவ்வித மனக்கவலையுமே ஏற்படாது. எனவே இப்பேதையுடன் ஒருவர் கொள்ளும் நட்பே பெரியதும், இனிமையானதுமான நட்பு என்றார் வள்ளுவர்.

**'கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால்**
**குழாஅத்தப் பேதை புகல்' (குறள் - 839)**

அறிஞர்கள் மிகுந்த அவையில் பேதை புகுவதானது சுத்தமாக இருக்கவேண்டியப படுக்கையினுள் மாசுபட்ட காலைமிதிப்பதற்கு ஒப்பானதாகும் என்றார் வள்ளுவர்.

**உவமானம் : படுக்கையில் மாசுபட்ட காலை மிதித்தல்**
**உவமேயம் : அறிஞர்கள் உள்ள அவையினுள் பேதை புகுதல்**
**பொதுத்தன்மை : இழிவடைதல்**

திருவள்ளுவர் எழுதிய பேதமை எனும் இவ்வதிகாரத்தை படிப்பதன் மூலம்பேதமைஎன்றால்என்ன?பேதையரின்தொழில்கள்?பேதையரின் இயல்புகள், பேதை பெருஞ்செல்வம் உற்றால் யாது செய்யும், நட்பு எப்படிப்பட்டது, சான்றோர்கள் உள்ள அவையில் பேதை புகுவது எப்படிப்பட்டது முதலான விடயங்களை அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் இவ்வதிகாரத்தை படிப்பதன் மூலம் நாம் ஒரு பேதையாக இருக்கக்கூடாது என்ற உணர்வு ஏற்படுகிறது.

**ர.கபியினி**
யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை

# ஒழுக்கம் விழுப்பம் தரலான்

இவ்வுலகில் வாழும் அனைத்து உயிரினங்களுக் கும் மிக அவசியமானது ஒழுக்கம் ஆகும். இந்த ஒழுக்கம் நமது வாழ்வை அலங்கரித்து நம்மை மே ன்மை அடைய செய்யும் சக்தியுடையது. ஒரு மனி தனுக்கு ஒழுக்கம் இல்லாததை விட மரணிப்பதே மேல் ஆகும்.

இவ்வொழுக்கத்தைப் பற்றி பல பெரியோர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். உத்தர வேதத்தில் எல்லா ஞானமும் பெற்ற முதற் பாவலர் 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். ஒழுக்கத்தின சிறப்புப் பற்றிக்கூற 'ஒழுக்கவுடைமை எனும் ஓர் அதிகாரத்தையே எழுதியுள்ளார்.

நாம் ஒழுக்கத்தை எந்த சந்தர்ப்பத்திலும் தவறக் கூடாது. அப்படீத்தவறினால்நாம்தாழ்தகுடிப்பிறப்பிற்குத் தள்ளப்பட்டு விடுவோம். இதனையே செந்நாப்புலவர் 'ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்' என எடுத்துரைக்கின்றார்.

நம் செயலில் மட்டும் ஒழுக்கம் இருந்தால் போதாது நம் நாவிலும் ஒழுக்கம் இருத்தல் வேண்டும். அதாவது எத்தனை இனிய சொற்கள் இருந்தாலும் நமது சமூகம் கொடூரமான கொச்சை மொழிகளையே பயன்படுத்துகின்றது. 'இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக்காய் கவர்ந்ததற்று' என்பதாலும் 'ஒழுக்கத்தின் ஒல்லாலே தீய வழுக்கியும் வாயால் சொலல்' என்பதாலும் திருவள்ளுவர் வலியுறுத்து- வது என்னவென்றால் ஒழுக்கம் உடையவர்கள் எக்காரணம் கொண்டும் தீய மொழிகளை உப யோகிக்க மாட்டார்கள் என்பதேயாகும்.

கொடுமையான செயல்கள் செய்பவர்களுக்கு சிறந்த ஒழுக்கம் இருக்காது. இதனையே தமிழ் மூதாட்டி ஔவையார் 'பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம்' எனக் கூறுகிறார். ஒழுக்கத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டுமெனில் கொடிய செயல்களைச் செய்யாமலிருத்தல் வேண்டும். பொய், களவு, கள், புலால், காமம் போன்ற பஞ்சமாபாவங்களை நாம் முற்றாகத்தவிர்க்க வேண்டும். நாம் சமய நூல்களை மனதால் கற்பதன் மூலம் சமய கருத்துக்களையும் பெரியார் போதனைகளை யும் அறிந்து கொள்ள முடியும்.

ஒழுக்கத்தால்நாம்மேன்மைஅடைகிறோம். 'ஒழுக்கத்தின் எய்துவர்மேன்மை இழுக்கத் தின் எய்துவர் எய்தாப்பழி' நாம் இழுக்கத்தைத் தழுவுவதன் மூலம் நாம் அடையக்கூடாத பாவத்தை எய்த வேண்டி வரலாம். ஒழுக்கம் பொதுவாக இரண்டு பிரிவாகப் பிரிகின்றது அவை நல்லொழுக்கம் மற்றும் தீயொழுக் கம் ஆகும். நாம் ஒழுக்கம் என்றால் நல் லொழுக்கத்தையே கருதுவோம். 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பைத்தரும்'

கடவுளைத்தொழுதல் கூட ஒரு ஒழுக்கமே நாத்திகனாக இருந்தால் நாம் ஒழுக்கமற் றவர்கள் எனப் பொருள். முண்டாசுக் கவிஞர் என அழைக்கப்படும் பாரதியாரின் புதிய ஆத்திசூடியில் 'நோற்பது கைவிடேல்'; எனும் அடியின் கருத்தின் மூலம் கடவுள் நம்பிக்கை யின் முக்கியத்துவமே உணர்த்தப்படுகின்றது.

நாம் வாழ்வின் எந்த உயரத்தை அடைந்தாலும் எங்களிடம் ஒழுக்கம் இல்லை யெனில் அந்த உயர்ச்சிக்குப் பயனில்லை. இதனையே முப்பாவலர் 'அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை ஒழுக்கம் இலான் உயர்வு' என்கிறார். பொறாமை உடையவரிடம் செல்வம் இல்லாதது போலவே ஒழுக்கம் இல்லாதவனின் உயர்வு.

ஒழுக்கத்தின் முக்கியத்ததுவம் பற்றி இன்று நேற்று கூறப்படவில்லை. பண்டைய காலம் தொட்டு கவிஞர்கள், புலவர்கள், பெரியோர்கள், ஞானி, மகான்கள் என்பவர்கள் ஒழுக்கத்தைப்பற்றிக் கூறிக்கொண்டே




உள்ளனர். கவரிமான் எனும் மானினம் தான் ஒழுக்கம் தவறினால் தனது உடலிலிருந்து ஒவ்வொரு முடியையும் உதிர்ந்துவிடும். இதன் கருத்து ஒழுக்கம் தவறி உயிருடன் இருப்பதை விட மடிதல் எவ்வளவோ மேன்மையானது. இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். அவர்களுக்குச் சிறிய வயதிலிருந்து ஒழுக்கத்தைப்போதித்தால்நாட்டின் ஒழுக்கம் நன்று சீராகும். நாமும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழ்வில் வெற்றி பெறுவோமாக.

**செல்வி. அம்பிகா இராதாகிருஷ்ணன்**
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

காலைக்கதிர் Kalaikkathir

# உழைக்கும் வர்க்கத்தினரின் நிதியை அபகரிக்க இணங்கப்போவதில்லை

## சுமந்திரன் திட்டவட்டம்



உழைக்கும் வர்க்கத்தினரின் நிதியை இல்லாது செய்ய நாம் ஒருபோதும் இணங்கப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கும் விசேட அமர்வு ஒன்று, மத்திய வங்கியின் ஆளுநரால் நடத்தப்பட்டது.

இதில்கலந்துகொண்டுகருத்துத்தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மத்திய வங்கியின் ஆளுநர், இது தொடர்பான தகவல்களை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகநாம்ஆராயவேண்டும். எமக்குக் கிடைத்துள்ள தகவலுக்கு அமைவாக, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பால், ஊழியர் சேமலாப நிதியமே பாதிக்கப்படும் என்று தெரியவந்துள்ளது. இவ்வாறு இதனை மேற்கொள்வதுதான் சரியான செயற்பாடு என்று ஆளுநர் கூறினாலும், நாம் இதனையிட்டு மகிழ்ச்சியடைய முடியாது. உழைக்கும் வர்க்கத்தினரின் நிதியை இல்லாது செய்ய நாம் ஒருபோதும் இணங்கப் போவதில்லை.

இது தொடர்பான முழுமையான தகவல்களை வழங்குவதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார். ஊழியர் சேமலாப நிதியத்திற்கு இதனால் பாதிப்பொன்று ஏற்படாது என்றே அரசாங்கம் இதுவரை கூறிவந்தது.

இந்த நிலையில், தற்போது இதற்கு முரணாக செயற்படுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைய முடியாது.

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படக் கூடாது என்பதே எமது கொள்கையாகும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

## ஊழியர் சேமலாப நிதிக்கு ஆபத்தா? மத்திய வங்கியின் விசேட அறிவிப்பு



ஊழியர் சேமலாப நிதி மீது அரசாங்கம் கை வைக்காது என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஊழியர் சேமலாப நிதி மீது அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்காது. எனவே மக்களின் நிதிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 9 வீத வட்டிக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளதுடன், வங்கிகளில் வைப்பு செய்துள்ள 57 மில்லியன் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாது.

வங்கிகள் ஏற்கனவே 50 வீதத்துக்கும் அதிகமான வரிகள்மூலம்திறைசேரிக்கும் பொருளாதாரத்துக்கும் பங்களிப்பு செய்துள்ளதால் அவற்றின் மீது மேலும் சுமைகளை சுமத்தக்கூடாது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்கான நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெறும்வரை ஊகங்களைத் தவிர்ப்பதற்காகவே அரசாங்கம் வெள்ளிக்கிழமையை வங்கி விடுமுறையாக அறிவித்துள்ளது என அவர் மேலும்தெரிவித்துள்ளார். (05)

## விமானப் படையின் புதிய தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் உதேனி பதவியேற்பு



விமானப் படையின் புதிய தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவால் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

அத்துடன் இலங்கை விமானப்படையின் தற்போதைய பதவி நிலைப் பிரதானியான எயார் வைஸ் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவுக்கு இன்று (வெள்ளிக்கிழமை) முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியினால் எயார் மார்ஷலாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. வைஸ் மார்சல் உதேனி ராஜபக்ஷ இந்நாட்டின் 19 ஆவது விமானப்படை தளபதியாகவுள்ள நிலையில், அவர் கொழும்பு ஆனந்த கல்லூரியின் மாணவர் என்ற வகையில் ஆனந்த கல்லூரியில் உருவான முதலாவது விமானப்படைத் தளபதியாகவும் கருதப்படுவார்.

1988 ஆம் ஆண்டில் பயிலுநராக கொத்தலால பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் இணைந்துக்கொண்டதோடு, அநுராதபுரம் முகாமில் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த அவர் முதலாம் இலக்க 33 ஆவது விமா னப்படை பயிற்சி பாடநெறியில் பங்குபற்றி பாடநெறியின் மிகச்சிறந்த பயிலுநராகவும் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளில் விமானப்படை அதிகாரியாக பங்கேற்ற அவர் சிறப்பான திறன்களை வெளிப்படுத்தியுள்ளார். விமானப்படை தளபதியாக நியமனம் பெறுவதற்கு முன்பாக அவர் விமானப்படையின் இரண்டாம் நிலை அதிகாரியாக நியமனம் வகித்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# கனேடிய கூட்டமைப்பின் 156ஆவது ஆண்டு விழா








கனேடிய கூட்டமைப்பின் 156 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு கனடாவுக்கான இலங்கை தூதரகத்தில் வரவேற்பு நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வு கடந்த புதன்கிழமை கொழும்பில் உள்ள தூதரகத்தில் கனடாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ் தலைமையில் இடம் பெற்றது.

வரவேற்பு நிகழ்வில் அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும் சர்வதேச இசைக் கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவருமான அதிவணக்கத்துக்குரிய பிதாஃ அருட்கலாநிதி எஸ் சந்துரூ பெர்ணாடோவும் பௌத்த மத பிக்குவான வணக்கத்துக்குரிய பேமரத்ன தேரரும், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். மேலும் இராஜாங்க கல்வி அமைச்சர் அரவிந்தகுமார், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல நாடுகளின் இராஜதந்திரிகள், இலங்கையில் உள்ள அனைத்து நாடுகளினதும் தூதரக தூதுவர்கள் என பலரும் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2
3

# அரசின் நலன்புரி உதவித்திட்ட பதிவுகளில் முறைகேடு; கோறளைப்பற்று மத்தி பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்







அரசாங்கத்தின் நலன்புரி உதவித் திட்ட பதிவுகளில் முறைகேடு எனவும், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் முறைகேடுகள் எனவும் தெரிவித்து கோறளைப்பற்றுமத்திபிரதேசசெயலகம் முன் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று (வியாழக்கிழமை) காலை முன்னெடுக்கப்பட்டது.

நேற்று காலை ஓட்டமாவடி கொழும்பு வீதியில் ஒன்று கூடிய பிறைந்துறைச்சேனை 204 ஏ பிரிவு சமுர்த்தி பயனாளிகளால் வாசகங்கள் எழுதிய பதாதைகளை கையில் ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும்ஊர்வலமாகஓட்டமாவடி, கொழும்புபிரதான வீதி வழியாக பிரதேச செயலகம் வரை நடந்து சென்றனர்.

அரசாங்கத்தின் நலன்புரி உதவி திட்டகொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர் பட்டியல் அண்மையில் வெளிவந்திருந்த நிலையில் இரு நேரம் மட்டும் உணவை உட்கொண்டு வாழ்பவர்கள், விசேட தேவைக்குட்பட்டவர்கள், முதியோர்கள், விதவைகள், உட்பட வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களின் பெயர்கள் உள்வாங்கப்படாமல் வெளிநாடுகளில் இருப்போர், வசதியானவர்களுக்கே இந்த உதவி கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவித்தே இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பிரதேசசெயலகம்கோறளைப்பற்று மத்தி வளாகத்தில் ஒன்று கூடிய மக்கள் தமக்கு நீதி கோரி போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அதன் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கோரிக்கை அடங்கிய மகஜரை செயலக திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம்.றுவைஸ் பெற்றுக்கொண்டார். மக்களுடன்சம்பவம் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

இது கிடைக்கதாவர்கள் மேன்முறையீடு செய்யலாம் என்றும் தகுதியற்வர்கள் தொடர்பாகவும் தெரியப்படுத்துமாறும் மேன்முறையீடுசெய்வதற்காக அலுவலகத்தில் சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவித்ததுடன் உடனடியாக விண்ணப்பங்களை சமர்பிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டார். (05)

# மக்கள் பக்கம் நின்று செயற்பட வேண்டிய பொறுப்பு உள்ளது

## இரா.சாணக்கியன் தெரிவிப்பு



உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான விடயத்தில் மக்கள் பக்கம் நின்று செயற்பட வேண்டிய பொறுப்பு உள்ளது என நாடாளு மன்றஉறுப்பினர் இரா.சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகளுக்கு விளக்கமளிக்கும் விசேட அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பாக, எதிர்க்கட்சிகள் எவ்வாறு ஒத்துழைப்புக்களைவழங்கவேண்டும் என்பது தொடர்பாக ஆராய்ந்தோம்.

ஊழியர் சேமலாப நிதியத்தில் இரண்டரை மில்லியன் கணக்குகள் உள்ளன.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை மேற்கொண்டு, இந்த கணக்குகளில் அரசாங்கம் கை வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. டொலர் பெறுமதி உயர்வடைந்து, ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்த காரணத்தால் இப்போதுகூட ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்த மூன்றில் ஒரு வீதமான கணக்குகள் இல்லாமல்தான் போயுள்ளன.

இவ்வாறுஇருக்க,தற்போதுமீண்டும் ஊழியர் சேமலாப நிதியத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் கை வைக்க முயற்சித்து வருகிறது.

இதனை சரியென காண்பிக்க எத்தனை கதைகளை அரசாங்கம் கூறினாலும், நாட்டிலுள்ள 2 கோடியே20லட்சம்மக்களைத்தான் அது பாதிக்கும்.

ஊழியர்சேமலாபநிதியத்துக்கு உள்நாட்டு கடன் மறுசீரமைப்பால் எந்தவொரு பாதிப்பும் இல்லை என்றுஆளும்தரப்பினர் இதுவரை கூறிவந்த நிலையில், தற்போது அதற்கு மாறாக இவர்கள் செயற்படுகிறார்கள்.

எனவே, எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நாம் மக்கள் பக்கம் நின்று செயற்பட வேண்டிய பொறுப்பு உள்ளது.

225நாடாளுமன்றஉறுப்பினர்களும் மக்களுக்காக இந்த விடயத்தை அணுக வேண்டும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# கடன் மறுசீரமைப்பினால் மக்களுக்கு பாதிப்பில்லை

## காமினி லொக்குகே கூறுகிறார்



கடன்மறுசீரமைப்பை மேற்கொள்வதால், நாட்டுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது என்பதை ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் என நாடாளுமன்றஉறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்பு குறித்து, ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவு படுத்தும் கலந்துரை யாடல் தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதேஅவர்இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மத்திய வங்கியின் ஆளுநர், கடன்மறுசீரமைப்பு எவ்வாறு மேற்கொள்ளப்படப் போகிறது என்பதை விளக்கமளித்தார். வெளிநாட்டுக் கடன் தொகையாக 49 ஆயிரம் மில்லியன் டொலர் நிலுவையில் உள்ளது.

17 வீத சலுகையை நாம் கடன் வழங்குநர்களிடம் கோரியுள்ளோம். இதன்போதுதான், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை மேற் கொள்ளுமாறு எமக்கு நிபந்தனை விதிக்கப்பட்டது.

உள்நாட்டுக்கடனாக 7ஆயிரம்மில்லியன்அளவில் காணப்படுகிறது. ஆனால், கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதால் எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது என்பதை ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். - என அவர் மேலும்குறிப்பிட்டுள்ளார். (05)

# சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு இல்லையாம்



சமையல் எரிவாயு விநியோகம் குறித்து லாப்ஸ் நிறுவனம் விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி லாஃப்ஸ் சமையல்எரிவாயு விநியோகம் தடையின்றி நடைபெறும் என லாப்ஸ் நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

வாடிக்கையாளர்கள்தமக்கு அருகிலுள்ள லாப்ஸ் எரிவாயு சிலிண்டர்விநியோககிளைக்கு சென்று கொள்வனவு செய்யலாம் என்பதுடன் போலியான தகவல்களை நம்ப வேண்டாம் என்றும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் 1345 என்ற இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் லாப்ஸ் வாடிக்கையாளர் பராமரிப்பு சேவையைத் தொடர்பு கொண்டு கொள்வனவு செய்யலாம் எனவும் லாப்ஸ் நிறுவனம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (05)

# உள்நாட்டு கடனை இரத்து செய்யாமல் மறுசீரமைப்பை மேற்கொள்ள முடியாது

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு



உள்நாட்டு கடனை இரத்து செய்யாமல், எவ்வாறு இந்த மறுசீரமைப்புச்செயற்பாட்டை மேற்கொள்ள முடியும் என்பதேதமது நிலைப்பாடாக இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகளுக்கு விளக்கமளிக்கும் விசேட அமர்வு ஒன்று, மத்திய வங்கியின் ஆளுநரால் நடத்தப்பட்டது.

இதில் கலந்து கொண்டிருந்த நாடாளுமன்றஉறுப்பினர்ஹர்ஷடி சில்வா மேற்படி தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மத்திய வங்கியின் ஆளுநர், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான தெளிவுப்படுத்தல் ஒன்றை வழங்கியிருந்தார்.

ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்டவர்களும் இதில் கலந்து கொண்டிருந்தார்கள்.

உள்நாட்டு கடனை இரத்து செய்யாமல், எவ்வாறு இந்த செயற்பாட்டை மேற்கொள்ள முடியும் என்பதே எமது நிலைப்பாடாக இருக்கிறது.

அரசாங்கமும், உள்நாட்டுக் கடனைஇரத்துசெய்யப்போவதில்லை என்று தெரிவித்துள்ளது.

இதனால், வங்கிக் கட்டமைப்பிற்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா? அல்லது சேமித்த பணத்திற்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா என்ற அச்சம் சமூகத்தில் நிலவி வருகிறது.

அத்தோடு, ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் பாதிப்பு ஏற்படும் என்ற கருத்து நிலவி வருகிறது.

ஆனால், மத்திய வங்கியின் ஆளுநரோ இவைஎதற்கும் பாதிப்பு ஏற்படாது என்று தெரிவித்துள்ளார்.

நாளை (சனிக்கிழமை) இதுதொடர்பாக நாடாளுமன்றில் விவாதம் நடைபெறவுள்ளது' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# வீட்டுக்கு அருகில் குப்பை கொட்டுபவர்களுக்கு சூனியம் வைத்த நபரால் குடாநாட்டில் பரபரப்பு

தனது வீட்டுக்கு அருகில் குப்பை கொட்டுபவர்கள் விபத்தில் சிக்க கூடியவாறு தான்சூனியம்வைத்துள்ளதாக அறிவிப்பைத் தனது வீட்டின் முன்னால் காட்சிப்படுத்தி உள்ளார்.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த நபர் ஒருவரே அவ்வாறு காட்சிப்படுத்தி உள்ளார்.

குறித்த நபரின் வீட்டு வீதியோரமாக பலரும் குப்பைகளை வீசி சென்றுள்ளனர். அதனால் தினமும் பல அசௌகரியங்களுக்குமுகம்கொடுத்து வந்துள்ளார்.

அதனால் பொறுமை இழந்தவர், ஒரு பொம்மை ஒன்றினையும், யந்திர தகடு ஒன்றினையும் தனது வீட்டு வேலியில் கட்டி , 'சூனியம் வைக்கப்பட்டுள்ளது. வாகன விபத்து நிச்சயம் ஏற்படும். தயவு செய்து வீதிகளில் குப்பைபோடவேண்டாம்'என பதாகை எழுதி காட்சிப்படுத்தி உள்ளார்.

அதன் பின்னர் அப்பகுதியில் எவரும் குப்பைகளை வீசி செல்வதில்லை என தெரிவிக்கப்படுகிறது. (05)

## ஊழியர் ....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

13ஐ விடவும் குறைந்த மட்டத்தில் அதனைப் பேண வேண்டும். அதனை சரியாகச் செயற்படுத்தினால் மூன்று தசம் அளவிலான இடைவெளியொன்றும் உருவாகும். இதனை சரியாக செயற்படுத்தினால் மொத்த தேசிய உற்பத்தி விகிதத்தின் கடன் தொகை சதவீதஅடிப்படையில்90ஆக குறைவடையும்.

தற்போதுதிறைசேரியின் கடன் பத்திரங்கள் 4.1 டிரில்லியன்களாக காணப்படுகின்றது. அவற்றில் 62.4சதவீதம் மத்திய வங்கியிடமே உள்ளது. நாம் அறிந்த வகையில் திறைசேரியின் கடன் பத்திரங்களை நீடிக்கப்பட்ட திறைசேரி பிணைமுறிகளாக மாற்றுவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. அது போதுமானதல்ல என்பதால் மிகுதி தொகையை பெற்றுக்கொள்வதற்காக நாம் திறைசேரி பிணைமுறிகள் தொடர்பில் அவதானம்செலுத்தப்பட்டது. தற்போது8.7டிரில்லியன்கள் பெறுமதியான திறைசேரி பிணைமுறிகள் காணப்படுகின்றன. 36.5சதவீத்திலும் (superannuation fund) 36 சதவீதமானவை வங்கிகளிலும் காணப்படுகின்றன. ஏனைய பகுதிகள் காப்புறுதி மற்றும் தனியார் நிறுவனங்களிடத்தில் உள்ளன.

இங்கு மத்திய வங்கி கட்டமைப்பு மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றை பாதுகாக்க முயற்சிக்கின்ற அதேநேரம் ஊழியர்சேமலாபநிதியத்தின் பொறுப்பாளராகவும் மத்திய வங்கியே செயற்படுகின்றது.

அந்த நிலைப்பாட்டிலிருந்தே மத்திய வங்கி இந்த விடயத்தில் தலையீடு செய்கிறது. அதற்கமைய மக்களின் வைப்புக் கணக்குகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் போன்ற பொது நிதியங்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காகவேமத்தியவங்கி மேற்படிசெயற்பாடுகளுடன் தொடர்புபட்டு இணங்கிச் செயற்படுகின்றது.

இந்த யோசனைகளில் அடிப்படையில் பார்க்கின்ற பது வங்கிகள் தற்போதும் ஆட்சியாளர்களின் கடன் சுமைகளைக் குறைப்பதற்கு அவசியமானபெரும்பங்களிப்பினை வழங்கியுள்ளன. குறிப்பாக தற்போது 50 சதவீத்திற்கும் அதிகமான வரிகளை வங்கிகளே செலுத்துகின்றன. அவற்றில்30சதவீதம் நிறுவன வரியாகவும், 18 சதவீதம் நிதிச் சேவை வரியாகவும், 2.5சதவீதம் சமூக பாதுகாப்பிற்கான உதவியாகவும் வழங்கப்படுகின்றது.

அதற்கமைய தற்போதும் வங்கிகளின் வருமானத்தில் 50சதவீத்தை அரசாங்கத்திற்கு செலுத்தி பங்களிப்பினை வழங்கிவருகின்றன. அதற்கு நிகராக (ளரிநசயஐெரயவழைஜ கரனெ) நிதியங்கள் 14சதவீதம் என்ற குறைந்த மட்டத்திலேயே வரிகளை அறவிடுகின்றன.

அதன்படி முதலாவது விடயத்திற்குவங்கிக்கட்டமைப்பிடமிருந்து தற்போதும் ஒத்துழைப்பு கிடைக்கிறது. இரண்டாவது விடயம், கடந்த காலங்களில் நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக கடனை செலுத்துவதில் வங்கிகள் சிரமத்தை எதிர்கொண்டிருந்தன. மேலும்வழங்கப்பட்ட சலுகை காலங்களின்படி, கடன்களை மீளச் செலுத்தாமையினால் டிரில்லியன் கணக்கிலான நட்டத்தையும் எதிர்கொண்டுள்ளன. அத்தோடு கடந்த காலங்களில் 1.6 டிரில்லியன்கள் பெறுமதியான சலுகை காலத்தை வழங்கியுள்ள நிலையில் தற்போதும் வங்கி கட்டமைப்பினால் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு கிடைக்கின்றது.

அதேபோல் வங்கி கட்டமைப்புக்களை பாதுகாத்தல் மற்றும் வைப்பாளர்களின்பணத்திற்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாதவாறு பாதுகாத்தல் என்பன முதன்மை பொறுப்புக்களாகும். அவர்களும் வரியின் ஊடாக பொருளாதாரத்திற்கும் திறைசேரிக்கும்பெருமளவான பங்களிப்புக்களை வழங்கியுள்ளனர்.

வங்கிகளுக்குள் காணப்படும் கணக்கு வைப்பாளர்களின் கணக்குகளின் எண்ணிக்கை 57 மில்லியன்களாக காணப்படுகின்றது. நாட்டிலிருப்பது 20 மில்லியன் மக்கள் தொகையாக உள்ளபோதும் 57 மில்லியன் வங்கிக் கணக்குகள் காணப்படுகின்றன. அந்தநிதிக்குபாதிப்பு ஏற்படுமாயின் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும்.

மத்திய வங்கி என்ற வகையில் வங்கிக் கட்டமைப்பை பாதுகாப்பதையே முதன்மை நோக்கமாக கொண்டுள்ளது. கடந்த காலங்களில் வங்கிகள் முடங்கப் போவதாக போலி பிரசாரங்கள் பரவியன. அதனால் வைப்புக்கள் இல்லாமல் போய்விடும் என்றும்கூறப்பட்டது.அதனால் பலரும்வைப்புக்களைமீளப் பெற முற்பட்டனர். வங்கிக் கணக்குகளைமீளப்பெற்றால் முழுப் பொருளாதாரமும் சரிவடையும்.

அதனால்மக்கள்வைப்புக்களை பாதுகாப்பதோடு 57 மில்லியன் வங்கிக் கணக்குகளையும் பாதுகாக்கும் செயற்பாட்டிற்கே முன்னுரிமைஅளிக்கப்படும். அதுவே மிகப்பெரிய சமூக சிக்கலாகும். அதனால் வங்கிக் கணக்குகள் மீது கைவைக்கும் எண்ணம் இல்லை.

அதனையடுத்து ஓய்வூதிய நிதியங்களை எடுத்துக்கொண்டால் 14மூக்கும் குறைவான வரிக்கு உட்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் உள்ளிட்ட பல நிறுவனங்கள் உள்ளன. இவர்களிடத்திலுள்ள அனைத்து பிணைமுறிகளையும் மீளப்பெற்றுக் கொண்டு அரசாங்கத்தினால் புதிய பிணைமுறிகள் விநியோகிக்கப்படும்.

அவற்றுக்கு 2025 வரையில்12சதவீத வட்டியும் கிடைக்கும். அதன் பின்னர் 9சதவீத வட்டி பெற்றுக்கொடுக்கப்படும். அதனால் ஊழியர் சேமலாப நிதியின் அளவு குறைக்கப்படாது. எதிர்காலத்தில் 9சதவீத வட்டி கிடைக்கும் என்பதை அரசாங்கம்உறுதிப்படுத்தும். அரசாங்கத்தினால்முன்வைக்கப்பட்டுள்ள வட்டி வீதம் குறைவெனநினைப்பவர்கள் திறைசேரியின் வெற்றிடத்தை நிரப்புதற்கான மேற்படி திறைசேரி பிணைமுறியில் பங்கெடுக்க விரும்பாதவர்களுக்கு மற்றுமொரு தெரிவும் உள்ளது. அதன்படி 14சதவீதத்திற்கு மாறாக பொதுமக்கள் செலுத்தும் 30சதவீத வரியை செலுத்த வேண்டியிருக்கும். அதன்படி சிலவாரங்களில்பிணைமுறி பரிமாற்றத்தை நிறைவு செய்து ஜீலை மாதத்திற்குள் அந்தச் செயற்பாடுகளை முழுமைப்படுத்த எதிர்பார்க்கிறோம் என்றார்.

அங்கு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அவர்,

மேற்படிஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும்

கேள்வி - ஊழியர் சேமலாப நிதியம் பற்றிய பல்வேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.திறைசேரி பத்திர முறைமைகள் அல்லது பரிந்துரைக்கப்பட்டுள்ள30மூ சதவீத வரி முறைமைகளின் ஊடாக இறுதியில் கிடைக்கும் பணத்திற்கு என்ன ஆகும் ?

பதில்: 'தற்போது பயனாளிகளுக்கு கிடைக்கும்' தொகை மாற்றம் இல்லாமல் அவ்வண்ணமே கிடைக்கும். முதலீடு செய்வதால் கிடைக்கும் 95% வட்டியும் கட்டாயமாக கிடைக்கும். அதனால் தற்போதைய நிலைக்கும் எதிர்கால நிலைமைகளிலும் மாற்றம் இருக்காது. ஆனால்30சதவீத வரியை செலுத்தாவிடின் 9% சதவீதத்தினையும் செலுத்த முடியாமல்போகும். அவ்வாறான நேரங்களில் 7 அல்லது 8 சதவீத வட்டியே கிடைக்கும். அதன்போது ஊழியர்சேமலாபநிதியத்தின் பயனாளர்களுக்கு வழங்கக் கூடியசிறந்ததீர்வைபெற்றுக் கொடுக்கும் வகையில் 9× வட்டியைசெலுத்தமுடியும்என நான்நம்புகிறேன். அதேபோல் நிதியத்திற்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாது.

கேள்வி - இலங்கையில் கடன்நிலைத்தன்மைஇல்லை என்பது பல வருடங்களாக பேசப்படும் விடயமாகும். அதனால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எதற்காக அதிகளவில் பிணைமுறிகள் விநியோகிக்கப்பட்டன என்ற பிரச்சினையும் உருவாகின்றதே?

பதில்: இலங்கையில் கடன் நிலைத் தன்மை இல்லை என்பதை சர்வதேச நாணயநிதியமும்2020ஆம் ஆண்டிலேயேகூறியது. கடன் மறுசீரமைப்புஎன்றவிடயம் 2021 ஆம் ஆண்டில்தான் பேசப்பட்டது.

அடுத்தாக ஊழியர் சேமலாபநிதியத்திற்குசேகரிக்கப்படும் பணம் நாட்டின் முதலீட்டின்பக்கமாக பார்க்கின்றபோதுஎவ்வாறுமுதலீடு செய்யப்பட வேண்டும் என்றகேள்வியும்காணப்படுகின்றது. வருடாந்தம்500மில்லியன்ரூபாஊழியர்சேமலாப நிதியத்திற்கு கிடைக்கின்றன. ஊழியர் சேமலாப நிதியம் மட்டுமின்றி காப்புறுதி நிதியத்தின் பணத்தையும் இலங்கையிலேயே முதலீடு செய்யவேண்டும். அவ்வாறானதொருபெரும்தொகையை பங்குச் சந்தையில் முதலீடு செய்வது சாத்தியமற்றது. அரசாங்கத்தினால் கடன் செலுத்த முடியாமல் போகின்றபோது திறைசேரி பத்திரங்களை பயன்படுத்த நேரிடும். அதுவே இறுதியில் நடக்கும்.

கேள்வி- ஊழியர்ஒருவர் ஓய்வுபெற்றுச்செல்லும்போது ஊழியர் சேமலாப நிதியை பெற்றுக்கொள்ள முடியுமா?

பதில் : ஆம். அது பற்றிய சந்தேகங்கள்அவசியமற்றது. காலம்முடிந்தவுடன்சேமலாப நிதியை பெற்றுக்கொள்ளும் இயலுமைபயனாளர்களுக்கு உள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.06.2023இல் வெளியிடப்பெற்றது.